## அல்லாஹ்வின் கட்டளை

وَاِنۡ تَعُدُّوۡا نِعۡمَةَ اللّٰهِ لَا تُحۡصُوۡهَا ؕ اِنَّ اللّٰهَ لَغَفُوۡرٌ رَّحِيۡمٌ ○

**பொருள்**

நீங்கள் அல்லாஹ்வின் அருள்களை எண்ணத் தொடங்கினால் அவற்றை உங்களால் (ஒருபோதும்) கணக்கிட முடியாது. நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும், மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான்.

(அந் நஹ்ல்: 16)


بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 9

இதழ் 47 - 48

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரீ 1446 - ஜமாதில் அவ்வல் 18-25 ★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1403 - நுபுவ்வத் 21-28 ★ 21 -28 நவம்பர் 2024


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## திருக்குர்ஆன்படி நடக்கின்ற மக்கள் மட்டுமே வெற்றி பெறுவர். திருக்குர்ஆனை விட்டு விட்டு வெற்றி பெறுவது என்பது ஒரு சாத்தியமற்ற மற்றும் இயலாத காரியமாகும்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

இஸ்லாம் கொண்டு வந்த அந்த ஈமானிய ஆற்றல் என்பது மிகவும் பலவீனமாகிவிட்டது. மேலும் பொதுவாக நாம் பலவீனவர்கள் ஆவோம் என்பதை முஸ்லிம்கள் உணர்ந்து விட்டனர். அவ்வாறில்லையென்றால், பின்னர் ஏன் அனுதினமும் ஜல்ஸாக்களும், கூட்டங்களும் நடந்து வருகின்றன? மேலும் நாங்கள் இஸ்லாத்தின் உதவிக்காக பணி செய்கின்றோம் என்று வாதம் புரியக் கூடிய புதுப் புது அமைப்புகள் ஏன் தோன்றி வருகின்றன? எனக்கு வேதனை ஏற்படுகின்றது. அதாவது, அவர்கள் இந்த சபைகளில் சமுதாயம்! சமுதாயம்! என்றோ அழைக்கின்றனர்; மேலும் சமுதாய முன்னேற்றம்! சமுதாய முன்னேற்றம்! என்ற பாடலையெல்லாம் பாடுகின்றனர்; ஆனால், எவராவது ஒருவர் எனக்கு இதனைக் கூறட்டும்; அதாவது முந்தைய காலத்தில் சமுதாயம் தோன்றிய போது, அது ஐரோப்பியர்களை பின்பற்றியதனால் உருவானதா என்ன? மேற்கத்திய சமுதாயங்களின் அடிச்சுவட்டின் வழி நடந்துதான் அவர்கள் எல்லா முன்னேற்றங்களையும் அடைந்தனரா என்ன? ஆம்! அப்படித்தான் முன்னேற்றம் அடைந்தனர் என்று நிரூபணமாகிவிட்டால் பின்னர் அது நிச்சயமாக பாவமாக இருக்கும். நாம் ஐரோப்பிய வாசிகளின் வழி நடக்கக் கூடாது.

ஆனால், அவ்வாறு நிரூபணமாகவில்லையென்றால், இஸ்லாத்தின் அடிப்படைகளை விட்டு விட்டு திருக்குர்ஆனை விட்டு விட்டு, அதாவது எந்தக் குர்ஆன் காட்டுமிராண்டியை மனிதனாகவும், மனிதனை இறை அடியாராகவும் மாற்றியதோ அந்தக் குர்ஆனை விட்டு விட்டு உலகை வணங்கக் கூடிய ஒரு சமுதாயத்தை பின்பற்றி நடப்பது எவ்வளவு அநீதியாகும்! எந்த மக்கள் இஸ்லாத்தின் மேன்மை மற்றும் வாழ்விற்கு மேற்கத்திய உலகை கிப்லாவாக ஆக்கிக் கொண்டார்களோ அவர்கள் வெற்றி பெற முடியாது. திருக்குர்ஆன்படி வழி நடக்கும் மக்கள் மட்டுமே வெற்றியாளர்களாக இருப்பர். திருக்குர்ஆனை விட்டு விட்டு வெற்றி பெறுவது என்பது ஒரு சாத்தியமற்ற மற்றும் இயலாத காரியமாகும்.

(மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 44, காதியான் பதிப்பு 2018-ம் ஆண்டு)

## இஸ்லாமிய ஷரீஅத் எந்த அளவிற்கு கட்டளைகள் வழங்கியுள்ளவோ அவை மனித குலத்தின் நன்மைக்காகவே வழங்கியுள்ளது

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் சூரா அல்ஹஜ், வசனம் 65-ற்கு விளக்கவுரை வழங்கியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

வானம் மற்றும் பூமியில் என்னவெல்லாம் இருக்கின்றனவோ அவை இறைவனுக்கே உரியதாகும். மேலும், அவன் எந்த தேவையும் அற்றவன் ஆவான். எனவே அவன் உங்களிடம் எதிர்பார்க்கும் ஒவ்வொரு தியாகமும் கூட உங்களின் நன்மைக்காகவே தவிர தனது நன்மைக்காக அல்ல. எனவே இஸ்லாமிய போதனைகளை சீர்தூக்கிப் பார்த்துக் கொள்ளுங்கள். அவன் எந்த அளவிற்கு கட்டளைகள் வழங்கியுள்ளானோ அவை மனித குலத்தின் நன்மைக்காக மட்டுமே தவிர அவற்றால் அவனது இறைத் தன்மையில் ஏதாவது கூடுதல் ஏற்படுகின்றது என்பதால் அல்ல. அவன் தொழுகைகளுக்கான கட்டளை வழங்கியுள்ளான் என்றால் அல்லது நோன்பு நோற்பதற்கான கட்டளை வழங்கியுள்ளான் என்றால் அல்லது ஸகாத் மற்றும் தான தருமங்களுக்கான கட்டளை வழங்கியுள்ளான் என்றால் அல்லது ஹஜ்ஜிற்கான கட்டளை வழங்கியுள்ளான் என்றால் இந்த அனைத்து கட்டளைகளும் எப்படிப்பட்டவை என்றால் அவற்றின் சொந்தப் பயன்கள் மனிதனுக்கு கிடைக்கின்றனவே தவிர இறைவனுக்கு அல்ல.

உதராணமாக தொழுகையையே எடுத்துக் கொள்ளுங்கள். அல்லாஹ் கூறுகின்றான்: .

اِنَّ الصَّلٰوۃَ تَنۡہٰی عَنِ الۡفَحۡشَآءِ وَالۡمُنۡکَرِ

தொழுகை மனிதனை தீமைகளிலிருந்து தடுக்கின்றது. எனவே எந்த நபர் உண்மையான பொருளில் தொழுகின்றாரோ அவருக்கு மற்ற ஆன்மிக பயன்களைத் தவிர தனிப்பட்ட முறையிலும் அவருக்கு நன்மை கிடைக்கின்றது. அதாவது அவர் தீமைகளிலிருந்து பாதுகாப்பு பெறுகின்றார். அதேபோன்று தொழுகையால் இந்த நன்மையும் கிடைக்கின்றது. அதாவது, சமுதாய ஒற்றுமையை பாதுகாத்து வைப்பதற்கான எண்ணம் மனிதனுக்கு எந்நேரமும் இருந்து வருகின்றது. மேலும், நாம் கட்டுப்பட்டு நடக்கக் கூடிய ஓர் இமாம் எப்போதும் இருக்க வேண்டும் ; மேலும் அவரை பின்பற்றி நடந்து இறைவனின் பெயரை ஓங்கச் செய்ய வேண்டும் என்ற இந்த உணர்வும் இருந்து வருகின்றது.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 6, பக்கம் 81)

## நபிமொழி

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு நபர் மற்றொரு நபரிடமிருந்து சில சொத்துக்களை வாங்கினார். விலைக்கு வாங்கியவருக்கு அந்த நிலத்திலிருந்து தங்கத்தால் நிறைந்த ஒரு புதையல் கிடைத்தது. அப்போது, வாங்கியவர் (நிலத்தை) விற்றவரிடம் சென்று, நீர் எந்த நிலத்தை எனக்கு விற்பனை செய்தீரோ அதிலிருந்து இந்த தங்கம் கிடைத்துள்ளது; அந்த தங்கத்தில் உமக்கும் உரிமை உள்ளது என்று கூறினார். ஏனெனில், நானோ நிலத்தை மட்டுமே வாங்கினேனே தவிர இந்தத் தங்கத்தை வாங்கவில்லை. எனவே இதனை உமக்கு திருப்பி கொடுப்பதற்காக வந்துள்ளேன் என்று அவர் கூறினார். எவர் நிலத்தை விற்பனை செய்திருந்தாரோ அவர் இவ்வாறு பதில் வழங்கினார்: நான் உமக்கு நிலத்தையும், அதில் உள்ளவற்றையும் மற்றும் அனைத்து உரிமைகளையும் விற்பனை செய்து விட்டேன். எனவே இந்த தங்கத்தை திரும்ப பெற்றுக் கொள்ள மாட்டேன் என்றார். இறுதியில் இந்த வழக்கை அந்த இருவரும் ஒரு சான்றோரிடம் கொண்டு சென்றனர்.

அவர் நிலைமைகளை விசாரித்து விட்டு கேட்டார்: உங்களுக்கு பிள்ளை ஏதாவது இருக்கின்றதா? அவர்களில் ஒருவர் எனக்கு மகன் இருக்கின்றார் என்றும், மற்றொருவர் எனக்கு மகள் இருக்கின்றார் என்றும் கூறினார்.

அப்போது நடுவர் இந்த ஆலோசனையை முன்வைத்தார். அதாவது, நீங்கள் இருவரும் உங்களுக்குள் சம்பந்தம் செய்து கொள்ளுங்கள். திருமணத்திற்கான செலவுகளை இந்த தங்கத்திலிருந்து முழுமை செய்து கொள்ளுங்கள். ஆக, இந்த தீர்ப்பை அவர்கள் ஏற்றுக் கொண்டனர். மேலும் திருமணத்தின் மூலம் நல்லொழுக்கத்தின் இந்த விலைமதிப்பற்ற முன்மாதிரியுடன் ஆன்மிக நெருக்கத்துடன் பௌதீக உறவுகளிலும் ஒருவர் மற்றவருக்கு நெருக்கமாகி விட்டனர்.

(புகாரீ கிதாபுல் அன்பியா, ஹதீக்கத்துஸ் ஸாலிஹீன், ஹதீஸ் எண்: 999)

* * * * * * * *


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**மஸ்ஜித் ஃபஸ்ல் லண்டன் அடிக்கல் நாட்டு விழா நடந்து நூற்றாண்டு நிறைவு பெறுவதையொட்டி பள்ளிவாசல்களின் முக்கியத்துவம் & நோக்கம் மற்றும் லண்டன் மஸ்ஜித் ஃபஸ்ல் வரலாறு**

ஒரு சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், இந்த நற்பேறான வருகை தொடர்பாக, ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுக்கு முதலில் ஒரு கனவு காட்டப்பட்டிருந்தது. அதாவது, அவர்கள் கடலின் ஓரத்தில் இங்கிலாந்தின் ஓரிடத்தில் இறங்குகின்றார்கள். அங்கு ஒரு மரக்கட்டையின் மீது காலை வைத்து, ஒரு வெற்றி பெற்ற ஜெனரலைப் போன்று. நாலாப் புறமும் பார்க்கின்றார்கள். அப்பொழுது William the Conqueror என்ற ஓசை வந்தது. ஆக, ஒரு வகையில் இங்கிலாந்தின் ஆன்மிக வெற்றி ஹுஸூர் (ரலி) அவர்கள் இங்கிலாந்து வருகை தருதலோடு விதிக்கப்பட்டிருந்தது. அது தற்போது வெளிப்பட்டது

ஒவ்வோர் அஹ்மதியின் கடமை என்னவென்றால், இந்தத் தப்லீஃகை இந்தத் தூதுச் செய்தியை அன்பு, நேசம் மற்றும் அமைதியோடு இருப்பதற்காக இஸ்லாத்தின் தூதுச் செய்தியை, சமாதானம் மற்றும் சமரசத்திற்கான இந்தத் தூதுச் செய்தியை உலகிற்கு எடுத்துக் கூற வேண்டும். அதற்குத் தெரியப்படுத்த வேண்டும்

மேலும் இந்த விஷயத்தைப் பரப்ப வேண்டும். அதாவது, இதுவே மனிதன் நிலைத்திருப்பதற்கான உத்தரவாதமாகும். இதைத் தவிர வேறு எதுவும் கிடையாது. இல்லையென்றால் வருங்கால சந்ததிகள் அழிவு, நாசம் எனும் குழியில் விழுந்து கொண்டே செல்லும். இந்தப் போர்களின் காரணமாக இனி பிறக்கப் போகும் சந்ததிகள் உடல் ஊனமுற்றவர்களாகவும், முடவர்களாகவும் பிறப்பது ஒன்றும் தொலைவில் இல்லை. எனவே இந்த வகையிலும் மக்களை எச்சரிக்க வேண்டியது அவசியமாகும்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 18 அக்டோபர் 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1403 ஆண்டு **அகா** மாதம் **18 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ

وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○

صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஃபஸ்ல் பள்ளிவாசலுக்கு நூறாண்டுகள் நிறைவடைந்ததை ஒட்டி நாளை யூ.கே ஜமாஅத் ஒரு நிகழ்ச்சியை நடத்துகிறது. அதில் அந்நியர்களான விருந்தினர்கள், அண்டை அயலார்கள் போன்றோரும் அழைக்கப்பட்டுள்ளனர். ஃபஸ்ல் பள்ளிவாசலுக்கு ஒரு வரலாற்றுச் சிறப்பு உள்ளது. எந்த வகையில் என்றால் இது கிறிஸ்தவர்களின் கோட்டையில் கட்டப்பட்ட அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முதல் பள்ளிவாசல் ஆகும். பிறகு இங்கிருந்து இஸ்லாத்தின் உண்மையான போதனையையும், தப்லீஃக்கையும் மக்களுக்கு வழங்கும் பணி விரிவான முறையில் துவங்கியது.

அஹ்மதிய்யா ஜமாஅத் ஆங்கிலேயர்களின் கைகளால் நடப்பட்ட செடி என்று நம்முடைய இன்று நம்மை கூறுகின்றனர். ஆனால், வியப்பு என்னவென்றால், (ஆங்கிலேயர்களின்) கைகளால் நடப்பட்ட இந்தச் செடியின் மூலமாக மேற்கத்திய நாடுகளில் வாழ்பவர்களை இந்த மக்களின் மதத்தின் பலவீனத்தை அவர்களது நாட்டில் வெளிப்படுத்திக் காட்டி இஸ்லாத்தின் அழகைப் பற்றி தப்லீஃக் செய்யப்படுகின்றது. அந்த ஆட்சேபனை செய்யக் கூடியவர்களுக்கோ இப்படியான மும்முரமான தப்லீஃக் பணியை மேற்கொள்வதற்கு நல்வாய்ப்பு கிடைக்கவில்லை. எனினும், ஃபஸ்ல் பள்ளிவாசல் கட்டப்படுவதற்கு முன்னர் வோக்கிங் (woking) என்ற இடத்தில் ஒரு பள்ளிவாசல் கட்டப்பட்டது. அதைக் கட்டியவர், பிரபலமான கிழக்கத்திய நாடுகளின் ஆய்வாளர் Gw Leitner என்பவர் ஆவார். இவர் லாஹுரில் ஓரியண்டர் கல்லூரியின் முதல்வர் பதவியில் இருக்கும் போது பணி ஓய்வு பெற்றார். பிறகு இங்கிலாந்துக்குத் திரும்பி வந்துவிட்டார். 1889 இல் வோக்கிங் பகுதியில் ஒரு பள்ளிவாசலைக் கட்ட வைத்தார்.

இது அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் நிறுவப்பட்ட அதாவது, அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தை நிறுவிய அதே ஆண்டுதான் என்பதும் ஒரு விநோதமான தற்செயலாகும். அந்தப் பிரசித்திப் பெற்ற பேராசிரியர் முஸ்லிம்கள் மார்க்கக் கல்வியும் பெற்று, தங்களது இறை வணக்கத்தையும் செய்து கொள்வதற்காக, பள்ளிவாசல் கட்டியதுடன் சேர்த்து கிழக்கத்திய அறிவுகள் தொடர்பான ஒரு நிறுவனத்தையும் உருவாக்கினர். இந்தப் பள்ளிவாசல் கட்டுவதில் இதற்காக போ(ஹ்)பாலைச் சேர்ந்த ஷாஹ்ஜஹான் பேகம் என்பவர் ஒரு பெரும் தொகையைக் கொடுத்தார். அவர் பெயரிலேயே இதற்கும் பெயர் (வைக்கப்பட்டு) உள்ளது.

எவ்வாறாயினும், 1889-இல் இந்தப் பேராசிரியர் மரணமடைந்து விட்டார். இந்தப் பள்ளிவாசலும் மூடப்பட்டது. அதைப் பராமரிப்பவர் யாரும் இருக்கவில்லை. பிறகு ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களது காலகட்டத்தில் காஜா கமாலுத்தீன் ஸாஹிப் அவர்கள் இங்கு வந்தார்கள். அவர்கள் இதைத் திறக்க வைக்க முயற்சி செய்தார்கள். வெற்றியும் பெற்றார்கள். அவர்கள் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுக்கு, இப்பொழுது இந்தப் பள்ளிவாசலுக்கு ஓர் அறக்கட்டளை உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கு நான் பொறுப்பாளனாக ஆக்கப்பட்டுள்ளேன் என்று கடிதம் எழுதினார்கள். பிறகு, மீண்டும் அதில் இறை வணக்கம் தொடங்கியது.

இது திறக்கப்பட்ட போது, அந்த நேரத்தில் காஜா கமாலுத்தீன் ஸாஹிப் அவர்களுடன் சவ்த்ரீ ஸஃபருல்லாஹ் கான் ஸாஹிப் அவர்களும் அந்தப் பள்ளிவாசலுக்குச் சென்றார்கள். அங்கு சென்று அன்னார் நஃபில் தொழுதார்கள். பெரும் துஆக்கள் செய்தார்கள். பிறகு சில காலங்கள் கழித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் முபல்லிஃக்மார்களை அனுப்புவதற்கான அறிவிப்பை செய்தார்கள். ஆனால் நிதி கிடைக்க முடியாமல் இருந்தது. ஆனால், எவ்வாறாயினும், எப்படியோ முயற்சி செய்து சவ்தரீ ஃஃபத்ஹ் முஹம்மத் ஸாஹிப் ஸியால் (ரலி) அவர்கள் இங்கு அனுப்பப்பட்டார்கள். பிறகு அன்னார் (ரலி) காஜா ஸாஹிப் அவர்களுடன் சில காலம் பணி புரிந்தார்கள். பிறகு ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் மரணத்திற்குப் பிறகு காஜா ஸாஹிப் அவர்கள் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்யவில்லை. இதனால் சவ்த்ரீ ஃபத்ஹ் முஹம்மத் ஸாஹிப் ஸியால் (ரலி) அவர்கள், அவரை விட்டு விலகி வேறு இடத்திற்குச் சென்று விட்டார்கள்.

எவ்வாறாயினும், இது வோக்கிங் பகுதியின் பள்ளிவாசலாக இருந்தது. ஆனால், முறையாக முஸ்லிம் பிரிவுகள் அல்லது அஹ்மதிய்யா ஜமாஅத் தரப்பிலிருந்து கட்டப்பட்ட பள்ளிவாசல் ஃபஸ்ல் பள்ளிவாசலே ஆகும். இன்று இங்கிலாந்திலும், இலண்டனிலும், மேற்கத்திய நாடுகளிலும் கூட முஸ்லிம்களிடம் பல்வேறு பள்ளிவாசல்கள் உள்ளன. ஆனால், இலண்டனில் முதல் பள்ளிவாசலாக இருக்கும் பெருமை ஃபஸ்ல் பள்ளிவாசலுக்கே கிடைத்துள்ளது. ஆனால், இங்குள்ள (பிறருடைய) பள்ளிவாசல்களும், அன்பு, நேசம், சமரசம் மற்றும் சகோதரத்துவத்துக்கான தூதுச் செய்தி ஒவ்வொருவரையும் சென்றடையும் வகையில் இஸ்லாத்தின் அழகான போதனையை எப்படி அஹ்மதிய்யா ஜமாஅத்தின்

பள்ளிவாசல்களிலிருந்து பரவுகிறதோ அது போன்று உலகில் பரப்பவில்லை; அல்லது மேற்கத்திய நாடுகளில் பரப்பவில்லை.

அடுத்து, அல்லாஹ்வின் இதுவும் அல்லாஹ்வின் அருள் ஆகும். அதாவது, மேற்கத்திய நாடுகளில் மற்ற பள்ளிவாசல்கள் இருக்கின்றன. அவை சில அரசாங்கங்களின் உதவியால் அல்லது சில இஸ்லாமிய அரசாங்கங்களும் அவற்றிற்கு சிறிதளவு உதவி செய்துள்ளன. ஆக இவ்வாறு அவை கட்டப்பட்டுள்ளன அல்லது அவற்றிற்கான செலவீனங்கள் நடக்கின்றன. ஆனால், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தனிச்சிறப்பு என்னவென்றால் ஜமாஅத் எந்த நிதியையும் (அவ்வாறு) பெறுவதில்லை. இன்னும் சொல்வதாயின் அந்தப் பள்ளிவாசல்களுக்கு தற்போதும் கூட அரசாங்க நிதி கிடைக்கின்றன.மேலும் இங்கு முஸ்லிம் அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. அவர்களுக்கு அரசாங்கத்தின் நிதியுதவி கிடைக்கின்றது. அவர்களுக்கு அரசாங்கத்தின் தரப்பிலிருந்து இங்கு இங்கிலாந்திலும் நிதி கிடைக்கின்றது.

ஆனால் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் சிறப்பு இதுவாகும். அதாவது ஜமாஅத்தின் பள்ளிவாசல்கள் மக்களின் சந்தாக்களால், தியாகங்களால் கட்டப்படுகின்றன. அல்லாஹ்வின் அருளால் இப்பொழுதோ இங்கிலாந்திலும் ஜமாஅத்தின் தியாகங்கள் காரணமாக டஜன் கணக்கில் பள்ளிவாசல்கள் கட்டப்பட்டு விட்டன. மேற்கத்திய நாடுகளிலும் எண்ணற்ற பள்ளிவாசல்கள் கட்டப்பட்டு விட்டன.

எவ்வாறாயினும், இன்று ஃபஸ்ல் பள்ளிவாசல் தொடர்பாகவே நான் சில விஷயங்களைக் கூற விரும்புகின்றேன். இதைப் பற்றி கூறுவதன் முக்கியத்துவம் எப்போது வெளிப்படும் என்றால், அல்லது நூற்றாண்டு நிறைவையொட்டி நாம் நடத்தும் நிகழ்ச்சிக்கு எப்போது பலன் இருக்கும் என்றால், நாம் பள்ளிவாசலின் நோக்கத்தை நிறைவேற்றுபவர்களாக இருக்கும் போதுதான். அது அதை நிரப்புவதற்கான உரிமை ஆகும். நமது நிலைமைகளை மாற்றுவதற்கான உரிமை ஆகும். அல்லாஹ்வுடன் தொடர்பில் முன்னேறுவதற்கான உரிமை ஆகும்.நம்முடைய சந்ததிகளை பள்ளிவாசலுடன் இணைப்பதற்கான உரிமை ஆகும். நாம் இஸ்லாமிய உரிமைகளை நிறைவேற்ற வேண்டும். எனவே இதை ஒவ்வோர் அஹ்மதியும் நினைவில் கொள்ள வேண்டும். ஒரு நிகழ்ச்சியை நடத்திவிட்டு, ஒளிவிளக்குகள் போட்டுவிட்டு மகிழ்ச்சி அடைந்து விடக் கூடாது. மாறாக இந்தப் பள்ளிவாசலுக்கான உரிமையை நிறைவேற்றுங்கள். அதன் வரலாற்றைப் பாருங்கள். பிறகு அந்த வரலாற்றில் ஆழ்ந்த சிந்தனையை செலுத்துங்கள். பிறகு உங்களுடைய நிலைமைகளைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்திடுங்கள்.

இது தொடர்பாக நான் கூற விரும்பும் அடிப்படையான விஷயம் என்னவென்றால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இஸ்லாம் மேற்கத்திய நாடுகளில் பரவுவது தொடர்பாக பல விஷயங்களைக் கூறியுள்ளார்கள். இதுதான் நமது முழுமுரமான தப்லீஃக் பணிகளின் அடிநாதமாகும். ஓரிடத்தில் இஸ்லாம் மேற்கத்திய நாடுகளில் பரவுவது தொடர்பாக ஓர் உண்மையான கனவைச் சான்றாகக் கொண்டு அன்னார் (அலை) கூறுகிறார்கள்:

அவ்வாறே மேற்கு திசையிலிருந்து சூரியன் உதிக்கும் என்பதில் நாம் எந்நிலையிலும் ஈமான் கொள்கிறோம். ஆனால் உண்மையான ஒரு கனவில் இந்த எளியவனுக்கு வெளிப்படுத்தப்பட்டது என்னவென்றால், மேற்கு திசையிலிருந்து சூரியன் உதிக்கும் என்பதற்குப் பொருள் என்னவென்றால், தொன்றுதொட்டே இருளில், நிராகரிப்பில், வழிகேட்டில் (மூழ்கி) உள்ள மேற்கத்திய நாடுகள் உண்மை எனும் கதிரவனால் ஒளியூட்டப்படும். அவர்கள் இஸ்லாமிய போதனைகளிலிருந்து பலன் பெற்றுக் கொள்வார்கள்.

அன்னார் (அலை) மிகவும் அறுதியிட்டுக் கூறியுள்ளார்கள். எனவே நாம் நம்பிக்கை வைக்க வேண்டும். இந்த நாடுகளிலும் இஸ்லாம் பரவும்! இன்ஷா அல்லாஹ்!

பிறகு அன்னாரது மற்றொரு முன்னறிவிப்பு உள்ளது. அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

நான் பார்த்தேன். நான் இலண்டன் நகரத்தில் ஒரு சொற்பொழிவு மேடை முன் நிற்கிறேன். ஆங்கில மொழியில் ஓர் ஆதாரப்பூர்வமான சொற்பொழிவு மூலமாக இஸ்லாத்தின் உண்மைத்துவத்தை வெளிப்படுத்துகிறேன். இதற்குப் பிறகு நான் பல பறவைகளைப் பிடித்தேன். அவை சின்னச் சின்ன மரங்களில் உட்கார்ந்திருந்தன. அவை வெள்ளை நிறத்தில் இருந்தன. (ஒருவகையான) காடையின் உடலைப் போன்று அவற்றின் உடல் இருக்கும் என்று நினைக்கிறேன்.

எனவே நான் அதற்கு அளித்துள்ள விளக்கம் என்னவென்றால், நான் இல்லையென்றாலும் என்னுடைய இலக்கியங்கள் அந்த மக்களிடத்தில் பரவும். நேர்மையான ஆங்கிலேயர்கள் பலர் (இஸ்லாத்தின்) உண்மையால் தாக்கமடைவார்கள். உண்மையில், இன்று வரை மேற்கத்திய நாடுகளுக்கு மார்க்க உண்மைகளுடனான தொடர்பு மிகக் குறைவாக இருந்துள்ளது. ஒருவகையில், மேலான இறைவன் மார்க்க அறிவை முழுவதும் ஆசியாவுக்கு வழங்கி விட்டான். உலக அறிவை முழுவதும் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவுக்கு வழங்கிவிட்டான்.

அன்னார் (அலை) கூறினார்கள்:

நபிமார்களின் (வருகைத்) தொடரும். துவக்கத்திலிருந்து இறுதி வரை ஆசியாவின் பங்கிலேயே இருந்துள்ளது. இறைநேசம் என்பதன் மேன்மைகளும் இந்த மக்களுக்கே கிடைத்துள்ளன. இப்பொழுது மேலான இறைவன் இந்த மக்கள் மீது கருணை புரிய விரும்புகிறான். அதாவது மேலான அல்லாஹ் மேற்கத்திய நாடுகளின் மக்களின் மீது கருணை புரிய விரும்புகிறான்.

எனவே இதுதான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வழிகாட்டல்; ஆசை; துஆ மற்றும் நற்செய்தி ஆகும். இந்தப் பணியைத் தொடர்வதற்காகத் தான் இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் இங்கிலாந்திலும், பிரிட்டானியா மட்டுமின்றி, உலகத்தின் பல்வேறு நாடுகளிலும், அமெரிக்காவிலும் பிற மேற்கத்திய நாடுகளிலும் இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியை எட்ட வைத்துக் கொண்டிருக்கின்றது. இதே நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவே ஃபஸ்ல் பள்ளிவாசலும் துவங்கப்பட்டது.




நான் ஏற்கனவே கூறியது போன்று வோக்கிங் பள்ளிவாசலுக்கு முதலில் காஜா கமாலுத்தீன் ஸாஹிப் அவர்கள் வந்தார்கள். ஆனால், ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் மரணத்திற்குப் பிறகு இவர்கள் கிலாஃபத்திடம் பைஅத் செய்யவில்லை. இதன் காரணமாக அப்பொழுது இவர்களுடன் இருந்த சவ்த்ரீ ஃபத்ஹ் முஹம்மது ஸியால் (ரலி) ஸாஹிப் அவர்களும் இவர்களுடன் சேர்ந்து ஒன்றாக பணிபுரிவதில் சிரமத்தை உணர்ந்தார்கள். அவர்கள் தனியாகப் பிரிந்து, பிறகு இன்னொரு இடத்திற்கு சென்று அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தப்லீஃக் பணியைத் துவங்கி விட்டார்கள். தூதுச் செய்தியை எட்ட வைக்கத் துவங்கினார்கள். அல்லாஹ்வின் அருளால் பிறகு அவர்களுக்கு வெற்றிகளும் கிடைத்தன.

ஆக, நாம் இவ்வாறு கூறலாம் ; முறையாக முபல்லிஃக் ஆக ஆகி இங்கு வந்த அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முதல் முபல்லிஃக் சவ்த்ரீ ஃபத்ஹ் முஹம்மது ஸியால் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஆவார்கள். முதல் கனியும் அவர்களுக்குக் கிடைத்தது. அவரது பெயர் மிஸ்டர் கோரியோ ஆகும். அவர் ஒரு பத்திரிகையாளர் ஆவார். இவர் முஸ்லிம் ஆனார். இதற்குப் பிறகு ஒரு டஜனுக்கு மேற்பட்ட மக்கள் அஹ்மதி முஸ்லிம்கள் ஆனார்கள். சவ்த்ரீ ஸாஹிப் (ரலி)அவர்கள் பெரும்பாலும் சொற்பொழிவுகள் மூலமாக தப்லீஃக் செய்து வந்தார்கள். அன்னார் (ரலி) இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எப்படி எட்ட வைத்து வந்தார்கள் என்றால், பல்வேறு இடங்களில் சென்று, கழகங்கள் மற்றும் சமூகங்களுக்குச் சென்று உரை நிகழ்த்தி வந்தார்கள்.

பிறகு காதியானில் இருந்து ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் சவ்த்ரீ ஃபத்ஹ் முஹம்மது ஸியால் ஸாஹிப் (ரலி) அவர்களை இங்கிருந்து திரும்ப வரவழைத்து விட்டு, காஸீ அப்துல்லாஹ் ஸாஹிப் (ரலி) அவர்களை முபல்லிஃக் ஆக ஆக்கி அனுப்பினார்கள். அவர்கள் இங்கு சிறிது காலம் பணிபுரிந்தார்கள். இவர்களும் காஸீ ஸாஹிபும் ஸஹாபியாக இருந்தார்கள். போர் ஆரம்பித்து விட்டிருந்த அந்த நிலைமையில் இது மிகவும் சிரமமான பணியாக இருந்தது. முதல் உலகப் போர் ஆரம்பமாகியிருந்தது. தப்லீஃக் பணி செய்வது மிகவும் சிரமமாக இருந்தது. ஆனால், இந்த மக்கள் தப்லீஃக் பணியை செய்து வந்தார்கள்.

காஸீ ஸாஹிப்(ரலி)அவர்களின் காலத்தில் மிஷன் ஹவுஸை ஒரு நிரந்தரமான இடமாக ஆக்கும் நோக்கத்தில் ஸ்டார் ஸ்ட்ரீட்டில் இருந்த வீடு வாடகைக்கு எடுக்கப்பட்டது. பிறகு வரலாற்றில் இதுவும் எழுதப்பட்டுள்ளது. அதாவது காஸீ ஸாஹிப் அவர்கள் இங்கு இருக்கும் போதே ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் முஃப்தீ முஹம்மது ஸாதிக் ஸாஹிப் (ரலி) அவர்களை முபல்லிஃக் ஆக அனுப்பி வைத்தார்கள். அவர்கள் 1917-லிருந்து ஜனவரி 1920 வரை இங்கே தங்கினார்கள். 1919 இல் மீண்டும் சவ்த்ரீ ஃபத்ஹ் முஹம்மது ஸியால் ஸாஹிப் (ரலி) அவர்களும் மவ்லவி அப்துர் ரஹீம் ஸாஹிப் நய்யார் (ரலி) அவர்களும் இங்கு அனுப்பி

வைக்கப்பட்டார்கள். அவர்கள் இருவரும் தன்னலமற்று பணியாற்றினார்கள். அஹ்மதிய்யத்தின் தப்லீஃக் செய்தார்கள்.

1920 இல் சவ்த்ரீ ஃபத்ஹ் முஹம்மது ஸியால் ஸாஹிப் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தரப்பிலிருந்து இவ்வாறு கூறப்பட்டது. பள்ளிவாசல் கட்டி முடிக்கின்ற வகையில், முறையாக ஒரு மிஷன் ஹவுஸைக் கட்டி அங்கு பணியைத் துவங்கும் வகையில் இங்கிலாந்தில் சிறிது நிலம் வாங்குங்கள்.

அதற்காக பின்னர் முயற்சி செய்யப்பட்டது. 2200 பவுண்டுக்கும் அதிகமான தொகையில் பட்னீ பகுதியில் இந்த இடம் வாங்கப்பட்டது. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுக்கு இந்தத் தகவல் கிடைத்தபோது, அன்னார் அப்பொழுது டல்ஹவுஸியில் இருந்தார்கள். அன்னார் (ரலி) அங்கு பெரிய விழா நடத்தினார்கள். பிறகு அங்கு இந்தப் பள்ளிக்கு ஃபஸ்ல் பள்ளிவாசல் என்று பெயரையும் சூட்டினார்கள். பிறகு பள்ளிவாசல் கட்டுவதற்காக அதிகமதிகமாக தொகை சேர்வதற்காக, சந்தா அறிவிக்கப்பட்டது. இந்த நிலப் பகுதியை சவ்த்ரீ ஃபத்ஹ் முஹம்மது ஸியால் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஓர் யூதரிடமிருந்து வாங்கினார்கள்.

நாம் அறிந்தது போன்று, அதில் இப்பொழுதோ புதிதாக கட்டடங்கள் கட்டப்பட்டு விட்டன. ஆனால் அப்பொழுது ஒரு வீடு மட்டும் இருந்தது. ஏறத்தாழ ஒரு ஏக்கர் அளவு நிலம் இருந்தது. பிறகு அந்தப் பள்ளிவாசல் அடுத்து எப்படி முன்னோக்கி எடுத்துச் செல்லப்பட்டது? எவ்வாறு கட்டப்பட்டது? என்பதைப் பற்றி வரலாறு நமக்குக் கூறுகின்றது.

1924 வெம்பலி கண்காட்சியின் போது, இந்த உலகளாவிய கண்காட்சியுடன் சேர்த்து உலகத்தின் பல்வேறு மதங்களையும் காட்சிப்படுத்த வேண்டும்; மேற்கத்திய மக்கள் மிக நன்றாக அறிந்துள்ள கிறிஸ்தவ மதத்தை மட்டும் தனியாக வைத்து விட்டு மற்ற மதங்களைப் பற்றிய தகவலைப் பெற வேண்டும்; இலண்டனுக்கு வரவழைத்து அந்த மதங்களின் பிரதிநிதிகளை அவற்றைப் பற்றி சொற்பொழிவு நிகழ்த்த வைக்க வேண்டும் என்ற சிந்தனை சில கண்ணியத்திற்குரிய மக்களுக்கு வந்தது. இதற்காக அவர்கள் அப்பொழுது இங்கு முபல்லிஃக் ஆக இருந்த மவ்லவி அப்துர் ரஹீம் ஸாஹிப் நையர் (ரலி) அவர்களையும் அஹ்மதிய்யா ஜமாஅத் சார்பாக சொற்பொழிவு நிகழ்த்துவதற்காக அழைத்தார்கள்.

மவ்லவி ஸாஹிப், மவ்லானா நய்யர் ஸாஹிப் அவர்கள் காதியானுக்குத் தகவல் கொடுத்தார்கள். இதனால் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அதை ஏற்றுக் கொண்டவாறு இங்கிருந்து யாராவது ஒரு பிரதிநிதியை நாம் அனுப்புவோம். அவர் இஸ்லாத்தின் சிறப்புகளை எடுத்துக் கூறுவார் (என்று கூறினார்கள்). அத்துடன் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தாமே ஒரு கட்டுரை எழுதத் துவங்கி விட்டார்கள். அதில் இஸ்லாத்தின் சிறப்புகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. உண்மையான போதனை எடுத்துக் கூறப்பட்டுள்ளது. சொற்பொழிவு ஆற்றுவதற்காக அன்னார் (ரலி) எழுதிக் கொடுத்த இது ஒரு மிகப் பெரிய நூலாக ஆகிவிட்டது. இது அஹ்மதிய்யத் யஃனீ ஹக்கீக்கீ இஸ்லாம் (அஹ்மதிய்யத் எனும் உண்மை இஸ்லாம்) என்ற பெயரில் இப்பொழுது வெளியாகியும் விட்டது.

எவ்வாறு இருப்பினும் இதற்குப் பிறகு ஜமாஅத் பிரதிநிதிகளின் ஆலோசனைக் கூட்டம் கூட்டப்பட்டது. அதில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் அப்துர் ரஹீம் ஸாஹிப் தர்து (ரலி) அவர்களும் இவ்வாறு ஆலோசனை வழங்கினார்கள். அதாவது இது எத்தகைய ஒரு சந்தர்ப்பம் என்றால் யாராவது ஒரு பிரதிநிதியை அனுப்புவதற்குப் பதிலாக ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தாமே அங்கு செல்ல வேண்டும்; ஹுஸூர் அவர்களுடன் சில நண்பர்களும் செல்ல வேண்டும் என்று ஆலோசனை வழங்கினார்கள்.

இதற்குப் பிறகு அன்னார் (ரலி) தாமே இங்கிலாந்துக்குச் செல்வதற்காகவும், டமாஸ்கஸ், எகிப்து போன்ற இடங்களுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டவாறு ஐரோப்பா சென்றடைவதாகவும், சில மக்களையும் தம்முடன் அழைத்துச் செல்வதாகவும் முடிவானது. அதில் ஹஸ்ரத் சவ்த்ரீ முஹம்மத் ஸஃபருல்லாஹ் கான் ஸாஹிப் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் மிர்ஸா ஷரீஃப் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஆகியோரும் இருந்தனர். ஹஸ்ரத் சவ்த்ரீ முஹம்மது ஸஃபருல்லாஹ் கான் ஸாஹிப் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் மிர்ஸா ஷரீஃப் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஆகிய இவ்விருவரும் தமது சொந்த செலவில் இங்கு வந்தார்கள். இவ்வாறே ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களும் தமக்கான சிறிது செலவைக் கொடுத்தார்கள்.

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் டமாஸ்கஸ் மற்றும் எகிப்து ஆகிய இடங்களுக்குச் சென்றுவிட்டு, இத்தாலி, சுவிட்சர்லாந்து மற்றும் பிரான்ஸ் வழியாக இங்கிலாந்து சென்றடைந்தார்கள். 22 ஆகஸ்ட் 1924-ல் இங்கு வந்தடைந்தார்கள். இங்கும் கூட ஒரு சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், இந்த நற்பேறான வருகை தொடர்பாக, ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுக்கு முதலில் ஒரு கனவு காட்டப்பட்டிருந்தது. அதாவது, அவர்கள் கடலின் ஓரத்தில் இங்கிலாந்தின் ஓரிடத்தில் இறங்குகின்றார்கள். அங்கு ஒரு மரக்கட்டையின் மீது காலை வைத்து, ஒரு வெற்றி பெற்ற ஜெனரலைப் போன்று, நாலாப் புறமும் பார்க்கின்றார்கள். அப்பொழுது William the Conqueror என்ற ஓசை வந்தது.

ஆக, ஒரு வகையில் இங்கிலாந்தின் ஆன்மிக வெற்றி ஹுஸூர் (ரலி) அவர்கள் இங்கிலாந்து வருகை தருதலோடு விதிக்கப்பட்டிருந்தது. அது தற்போது வெளிப்பட்டது.

பத்திரிகைகள் ஹுஸூர் (ரலி) அவர்களது பயணத்தையும் இங்கிலாந்து வந்தடைந்ததையும் மிகவும் வெளிப்படையாக தெரியும் வண்ணம் வெளியிட்டன. அன்னார் (ரலி) அங்கு சென்றடைந்ததும், பிறகு லண்டன் விக்டோரியா ஸ்டேஷனில் இறங்கினார்கள். போர்டில் இருந்து பிறகு அங்கு விக்டோரியாவுக்குச் சென்றார்கள். இங்கு அன்னார் (ரலி) இறங்கினார்கள். இங்கிருந்து அன்னாரும், அன்னாரது ஜமாஅத்தும் செயின்ட் பால் உடைய மகத்துவ மிக்க மற்றும் இங்கிலாந்தின் மிகப் பெரிய தேவாலயத்திற்கு முன்னால் இங்கே வந்து சேர்ந்தார்கள். இதற்குப் பிறகு அதற்கு முன்னால் நின்று கொண்டு, அன்னார் (ரலி) கம்பீர மிக்க இறைவனிடம் இஸ்லாம் மற்றும் ஏகத்துவத்தின் வெற்றிக்காக துஆ செய்தார்கள்.

பிறகு அன்னார் (ரலி) நகரத்திற்குள் நுழைந்தார்கள். தமது பயணக் குழுவுடன் சேர்ந்து நகரத்திற்குள் நுழைந்தார்கள். அன்னார் (ரலி) தங்குவதற்காக ஏற்கனவே ஒரு சிறிய இடம், நல்ல ஓர் இடம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த இடம் எப்படி இருந்தது? என்றால், ஒரு பெரிய வீடு இருந்தது. மத மாநாட்டுக்கான கட்டுரை (எழுத), தனிநபர் சந்திப்புகள் மற்றும் பொது சொற்பொழிவுகள் (எழுத) ஆகியவற்றுக்காக இந்தக் கட்டடம் வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையில் நிஃமத்துல்லாஹ் கான் ஸாஹிப் ஷஹீது அவர்களைக் கல்லால் அடித்துக் கொலை செய்யப்பட்டார்கள். இந்தத் தகவலும் காபுலில் இருந்து கிடைத்தது. இந்த நிகழ்வுகளின் காரணத்தினால் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு அதிக பிரபல்யம் கிடைத்தது. பல பத்திரிகைகளில் இதைப் பற்றி விவாதிக்கப்பட்டது. எவ்வாறு இருப்பினும், இந்த நிகழ்ச்சிகளுக்குப் பிறகு பள்ளிவாசலின் அடிக்கல் நாட்டுவதற்கான முறை வந்தது. இந்தப் பணியும் அல்லாஹ்வின் அருளினால் மிகவும் கம்பீரமான முறையிலும், முழு தாக்கம் ஏற்படுத்தும் வகையிலும் நடந்தது.

பள்ளிவாசல் தொடர்பாக வரலாற்றில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: விலாயத்தில் (அதாவது, ஐரோப்பா, இங்கிலாந்து போன்ற மேற்கத்திய நாடுகளில்) தப்லீஃக் அமைப்பு துவங்கியதுமே ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுக்கு ஒரு பள்ளிவாசலைக் கொண்டு வர வேண்டும் என்ற சிந்தனை உருவாகி விட்டது. ஏனெனில், அங்கு மீண்டும் மீண்டும் வீடுகளை மாற்றுவதனால் தப்லீஃக்கின் தாக்கத்துக்குக் கடுமையான இழப்பு ஏற்பட்டு வந்தது. எந்நிலையிலும், ஜமாஅத்திற்கு ஒரு தலைமையகம் இருக்க வேண்டியதிருந்தது. ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடம் என வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டே செல்வதனால், முறையாக இல்லாததனால் அந்த அளவுக்குத் தாக்கம் இருப்பதில்லை.

எனவே எந்நிலையிலும் தலைமையகம் இருக்க வேண்டும் என அன்னார் (ரலி) எண்ணினார்கள். ஆனால், இந்தப் பணி வெளிப்படையாக பார்க்கையில் கடினமானதாக தென்பட்டது. 1919 வரை இதற்காக எந்தவொரு செயல் திட்டமும் உருவாக முடியவில்லை. பணம் கிடைப்பது, ஒழுக்கமான மக்களின் பகுதியில் இடம் கிடைப்பது, அதில் சட்ட ரீதியான எந்த விதமான வில்லங்கமோ, கட்டுப்பாடோ இல்லாமல் இருப்பது ஆகிய விஷயங்கள் இருந்தன. இந்த விஷயம் லண்டனின் வீடுகளையும், நிலங்களையும் வாங்குவதில் அதில் விருப்பப்படி கட்டடம் கட்டுவதிலும் மிகப் பெரும் தடையாக இருந்தது.

இந்த நிபந்தனைகளும் நிறைவேற வேண்டும். பிறகு அதைக் கட்டுவதிலும் அதைக் கண்காணிப்பதிலும்

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

எல்லாவற்றையும் விடப் பெரிய விஷயமாக, மக்களது கவனத்தை இதன் பக்கம் ஈர்ப்பது ஆகிய இவை எல்லாம் எப்படிப்பட்ட விஷயங்களாக இருந்தன என்றால் அவை அதன் வழியில் இடைப்பட்டிருந்தன. ஆனால், இறைவன் எல்லா ஏற்பாட்டையும் சிறந்த முறையில் சிறந்த வடிவத்தில் நிறைவேற்றி விட்டான்.

எல்லாவற்றிற்கும் முதலாக பணம் கிடைத்த விஷயம் இருந்தது. அது எவ்வாறு நிகழ்ந்தது என்றால், போர் முடிந்ததும் எப்படிப்பட்ட ஒரு காலம் வந்தது என்றால், பவுண்டுடைய மதிப்பு வீழ்ச்சியடையத் துவங்கி விட்டது.பவுண்டுடைய மதிப்பு அதிகமாக சரிந்ததும், ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களது உள்ளத்தில் இந்த சந்தர்ப்பத்தில் இருந்து பலன் பெறுவதற்கான திட்டம் மிகவும் வலுவாக உதித்தது. அன்னார் (ரலி) லுஹர் தொழ வைத்துவிட்டு இந்த சிந்தனையில் திரும்பிச் சென்று கொண்டிருந்தார்கள். அங்கு அப்பொழுது, தாமதமாக வந்த தொழுகையாளிகள் சிலர் பள்ளிவாசலில் தொழுது கொண்டிருந்தனர். அவர்களால் போக வழி இல்லாமல் இருந்தது. எனவே அன்னார் (ரலி) அங்கேயே இருந்து விட்டார்கள். பிறகு அங்கேயே அமர்ந்து விட்டார்கள்.

அங்கே அமர்ந்து கொண்டு அன்னார் (ரலி) நாஸிர் பைத்துல்மால் அவர்களிடம் இவ்வாறு கூறினார்கள்:

இப்பொழுது 14,15 ஆயிரம் ரூபாய் கடன் வாங்கி இங்கிலாந்துக்கு அனுப்பி விடுங்கள். பணம் மாறியதனால் இன்றைய காலத்தில் விலை சரிந்து கொண்டிருக்கின்றது. எனவே அதிகமான பவுண்டுகள் கிடைத்துவிடும்.

அதற்குப் பிறகு, அன்னார் (ரலி) வீட்டிற்கு வருகை தந்தபோது, இந்தத் திட்டத்திற்கு இறுதி வடிவம் கொடுத்தார்கள். பிறகு நாஸிர் பைத்துல் மால் அவர்களுக்கு எழுதினார்கள். பிறகு அன்னார் (ரலி) திட்டம் அறிவித்தார்கள். எனவே 14,15 ஆயிரத்திற்குப் பதிலாக 30 ஆயிரம் ரூபாய் தொகையை அன்னார் (ரலி) எழுதி விட்டார்கள்.முதலில் கடன் வாங்கி அனுப்புங்கள் என்று இருந்தது அல்லவா! எனவே தற்போது அன்னார் (ரலி) கடனுக்குப் பதிலாக சந்தா என்ற சொல்லை எழுதி விட்டார்கள். இப்படி சுயமாகவே நடந்து விட்டதாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறிவந்தார்கள். இந்தத் திட்டத்தை எழுதி, அன்று அஸ்ர் நேரத்தில் நாஸிர் பைத்துல் மால் அவர்களிடம் கொடுத்தார்கள். அன்னார் (ரலி) . அவரிடம் இதற்காக மக்ரிப் தொழுகைக்குப் பிறகு முபாரக் பள்ளிவாசலில் மக்களை ஒன்று கூட்டுமாறு கூறினார்கள்.

அங்கு இடம் மிகவும் குறைவாக இருந்தது. அறிவிப்புக்காக நேரமும் குறைவாக இருந்தது. ஆனால், பிறகும் ஹுஸூர் (ரலி) அவர்களின் இந்த முதல் (கட்ட) திட்ட அறிவிப்பில் 6000 ரூபாய் சந்தா வந்து விட்டது. இரண்டாவது நாள் பெண்களிடம் திட்டம் அறிவிக்கப்பட்டது. பிறகு அன்றைய நாள் அஸ்ர் நேரத்தில் ஆண்கள் மத்தியில் அக்ஸா பள்ளிவாசலில் மீண்டும் திட்டம் முன்வைக்கப்பட்டது. இறுதியாக 9 ஜனவரி, 1920 ஜுமுஆ நாளன்று குத்பாவில் பொது அறிவிப்பு செய்தார்கள். மேலும் ஜனவரி 10,12-ம் தேதிக்குள் வெறும் காதியானின் சந்தா மட்டுமே 12 ஆயிரத்தை எட்டி விட்டது. மேலும் இந்த ஏழை ஜமாஅத், காதியான் மக்கள் பெரும் தியாகங்கள் செய்து சந்தா சேர்த்தார்கள்.

ஹுஸூர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

இந்த ஏழை ஜமாஅத்திலிருந்து இவ்வளவு தொகை சந்தாவாக வசூலானது. இறைவனது சிறப்பான ஆதரவு இல்லாமல் இருக்க முடியாது. இப்பொழுது சந்தா விஷயத்துடன் அல்லாஹ்வின் சிறப்பான அருள் இருப்பதாக நான் புரிகிறேன். அன்னார் (ரலி) கூறினார்கள்: மக்களுடைய உத்வேகத்தையும், உணர்ச்சியையும் பார்க்க வேண்டுமே! இதைக் கண்ணால் பார்த்ததனால் மட்டுமே இதை சரியாகக் கணித்திட முடியும். எல்லாப் பெண்களும், ஆண்களும் (தியாகம் எனும்) போதையில் திளைத்து, தியாக உணர்வினால் நிரம்பி, சந்தா கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஒரு பிள்ளை ஏழையான, கடினமாக உழைத்து பணிபுரியக் கூடிய மனிதருடைய மகன் ஆவார். அந்தப் பிள்ளை கூறினார்: 13 அரை ரூபாய் சேர்த்து வைத்துள்ளேன். அந்தக் காலத்திலோ 13 அரை ரூபாய்க்கு ஓரளவு மதிப்பு இருந்தது. பண மதிப்பு குறைந்ததே! அதன் அடிப்படையிலும் ஒன்று, ஒன்றரை பவுண்டோ இருக்கத்தான் செய்யும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எந்த நம்பிக்கைகளோடு இந்தப் பிள்ளை அந்தப் பணத்தை சேர்த்ததோ தெரியவில்லை. ஆனால் மார்க்கத்திற்கான உத்வேகம் இறை வழியில் அந்தப் பணத்துடன் சேர்த்து அந்த நம்பிக்கைகளையும் அர்ப்பணித்து விட்டது. எவ்வாறு இருப்பினும், இந்தத் தியாகத்தில் மக்கள் எண்ணற்ற முறையில் முன்னேறிக் கொண்டே சென்றார்கள். பிறகு அன்னார் (ரலி) வெளியில் குர்தாஸ்பூர் லாஹூர் போன்ற இடங்களிலும் திட்டத்தை அறிவித்தார்கள். இந்த மூன்று மாவட்டங்களில் இருந்து 30 ஆயிரம் ரூபாய் முழுமையாகி விடும் என்று நினைத்திருந்தார்கள்.

இதற்கு பிறகு அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: மற்ற ஜமாஅத்துகள் முறையிடக் கூடாது என்ற ஐயம் எனக்கு இருந்தது. எனவே நான் அதை இன்னும் அதிகரித்து விட்டேன். மக்கள் நற்கூலியில் இணைந்து கொள்ளும் பொருட்டு தொகையையும் அதிகரித்து ஒரு லட்சம் ஆக்கிவிட்டேன்.

இன்னும் கூறுவதாயின், ஒரு நபர் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களுக்கு இவ்வாறு எழுதினார்: நான் ஒரு வியாபாரம் செய்து கொண்டிருக்கின்றேன்; வல்ல இறைவன் என்னை எனது நோக்கத்தில் வெற்றி பெறச் செய்வதற்காக தாங்கள் துஆ செய்யுங்கள். அதற்கு (இறைவனுக்கு) நன்றி செலுத்தும் விதமாக, நான் விலாயத்தில் (இங்கிலாந்து, ஐரோப்பா போன்ற வெளி நாடுகளில்) அஹ்மதிய்யா பள்ளிவாசலைக் கட்டுவதற்கு எவ்வளவு செலவாகுமோ அந்த முழு செலவையும் நானே ஏற்றுக் கொள்வேன்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் அதற்கு அனுமதியோ வழங்கவில்லை. ஏனெனில், நான் யாரையும் இழப்பிற்குரியவர்களாக ஆக்க விரும்பவில்லை. எவ்வாறு இருப்பினும், இந்தத் தொகை சேர ஆரம்பித்தது; சேர்ந்தது. மேலும் இந்தத் தொகை பேங்க் ஆஃப் இந்தியா மூலமாக இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டது. அது 3,468 பவுண்ட் ஆகிறது. இன்றைய நமது நிலைமையும் அப்பொழுது இருந்த நிலைமையையும் கணித்துப் பார்த்துக் கொள்ளுங்கள்! ரூபாய்களில் 52 ஆயிரம் ரூபாய் வந்தது. ஒரு வாரத்திற்குள் இந்தத் தொகை சேர்ந்து விட்டது.

பிறகு மேற்கொண்டு தொகை அனுப்பப்பட்டது. இவ்வாறு அந்த நாட்களில் பவுண்டின் பண மதிப்பீடும் மீண்டும் சரிந்து விட்டது. அதனால் குறைவான ரூபாய்களில், மிகக் குறைவான ரூபாய்களில் அதிக தொகை, அதிக பவுண்டு கிடைத்தது. எவ்வாறு இருப்பினும், நான் முன்னரும் குறிப்பிட்டது போன்று ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி)அவர்கள் இங்கு வருகை தந்ததனால் இந்தப் பள்ளிவாசல் கட்டுமான பணி மற்றும் இதன் அடிக்கல் நடும் பணி துவங்கவும் செய்தது.

19 அக்டோபர் 1924 ஞாயிற்றுக்கிழமை அன்று இதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. வரலாற்றில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அப்பொழுது 18 அக்டோபர் 1924 அன்றைய பத்திரிகை அக்டோபர் 19 அன்று வானிலை நன்றாக இருக்கும். சூரியன் வெளிவரும் என்று வானிலை அறிக்கையை முன்னறிவித்திருந்தது.

ஆனால், இறைவன் அந்த (வானிலை அறிக்கை தொடர்பான) முன்னறிவிப்பை தவறானதாக நிரூபித்துக் காட்டினான். மேலும் தனது இருப்பிற்கான ஒரு பகிரங்கமான சான்றை அளித்தான். காலையிலிருந்து மழை பொழிய ஆரம்பித்து விட்டது. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுக்கு முன்னால் இந்த விவகாரம் முன்வைக்கப்பட்ட போது அன்னார் (ரலி) கூறினார்கள்:

பதற்றம் அடைய வேண்டிய தேவை என்ன இருக்கிறது? மிகவும் நன்றாகவே நடந்துள்ளது. இப்படிப்பட்ட நிலையில் எந்த மக்கள் துவக்க விழாவுக்காக வருவார்களோ அவர்கள் கலப்பற்ற தன்மையுடன் வருவார்கள்.

நாளையும் மழை பொழியும் என்ற (வானிலை) அறிக்கை தொடர்பாக முன்னறிவித்துள்ளார்கள். இப்பொழுது பார்க்கலாம் என்ன நடக்கிறது? என்று! (வானிலை குறித்த) முன்னறிவிப்பு நிறைவேறுகிறதா? இல்லையா? என்று!

எவ்வாறு இருப்பினும், அன்னார் (ரலி) கூறினார்கள்: எவர்கள் வருவார்களோ அவர்கள் களங்கமற்றத் தன்மையுடன் வருவார்கள்;இந்த நிகழ்ச்சி வெற்றியடையும். இன்ஷா அல்லாஹ்! மக்கள் மார்க்கியில் அமர்ந்து நிகழ்ச்சியை நிம்மதியாகப் பார்ப்பதற்காக சிறிய கூடாரம் போடப்பட்டது. பல்வேறு மக்களுக்கு அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டன. பாராளுமன்றத்தின் உறுப்பினர்கள் இருந்தார்கள். தலைவர்கள் இருந்தார்கள். அரசியல்வாதிகள் இருந்தார்கள். அரசியல் நிபுணர்கள் இருந்தார்கள். பல்வேறு வகையான மக்கள் கலந்து கொண்டிருந்தார்கள். நேரம் குறைவாகத்தான் இருந்தது. எனவே மிகக் குறைவான மக்களே வருவார்கள் என்று கருதப்பட்டது. ஆனால் பிறகும் கூட பெரும் எண்ணிக்கையில் விருந்தினர்கள் வந்து விட்டார்கள். பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். இந்த நிகழ்ச்சி எல்லா விதத்திலும் வெற்றி பெற்றது.

இந்த நிகழ்ச்சியின் போது எங்கு அடிக்கல் நாட்ட இருந்தார்களோ அங்கு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் நின்று கொண்டார்கள். அன்னார் (ரலி) நின்றதும், ஹஸ்ரத் ஹாஃபிழ் ரோஷன் அலீ ஸாஹிப் (ரலி) அவர்கள் அல் லைல் மற்றும் அல் அஃலா ஆகிய இரண்டு சூராக்களை ஓதினார்கள்.

இதற்குப் பிறகு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

அன்னார் (ரலி) கூறினார்கள்: இன்று நாம் எத்தகைய ஒரு பணிக்காக ஒன்று கூடி இருக்கிறோம் என்றால், அது தனது வகையில் முற்றிலும் தனித்த ஒன்றாகும். எல்லா உலகங்களையும் படைத்தவ(னான அந்த இறைவ)னை நினைவு கூர்வதற்காக, அவனுக்கு முன்னால் நமது அடியார் எனும் பண்பை வெளிப்படுத்துவதற்காக கட்டப்படுகின்ற ஒரு கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டுவதற்காக ஒன்று கூடியுள்ளோம்.

அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களானாலும் சரி; எந்த அரசாங்கத்தின் கீழ் வாழ்பவர்களானாலும் சரி; எந்த மொழி பேசினாலும் சரி; அங்கு சென்று ஒன்றாகி விடுகிறார்கள். (இறைவனின்) அந்த இருப்பு, எத்தகைய மையப் புள்ளியாக இருக்கிறது என்றால், அதற்கு முன்னால் எல்லா மனிதர்களும் பெரியவர்கள், சிறியவர்கள், கருப்பர்கள், வெள்ளையர்கள், கிழக்கத்தியர்கள், மேற்கத்தியர்கள் என்ற பேச்சுக்கே இடம் இல்லை. ஏனெனில், அவனுக்கு அருகில் செல்ல செல்ல கருத்து வேறுபாடுகள் அகன்று கொண்டே செல்கின்றன. ஒற்றுமை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. எனவே எந்தக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டுவதற்காக நாம் இன்று ஒன்று கூடியுள்ளோமோ அது ஒற்றுமை மற்றும் ஒன்றுபடுதலுக்கான ஓர் அடையாளமாகும். அது தனது இருப்பினால் நமது ஆரம்ப இடமும், திரும்புமிடமும் ஒன்றுதான் என்பதன் பக்கம் நமக்கு கவனமூட்டுகிறது.

எனவே நாம் ஒருவர் மற்றவருடனான கருத்து வேறுபாட்டின் காரணத்தினால் ஒருவர் மற்றவருடன் சண்டையிடவோ குழப்பம் செய்யவோ கூடாது.

பிறகு அன்னார் (ரலி) இதையும் கூறியுள்ளார்கள்; கருத்து வேறுபாடுகளோ ஏற்பட்டுக் கொண்டுதான் இருக்கும். உலகத்தில் கருத்து வேறுபாடுகள் எப்படிப்பட்டவை என்றால், கருத்து வேறுபாடுகள் இருக்கக் கூடாது என்பது அல்ல. இதுவோ நல்ல விஷயம் ஆகும். இன்னும் சொல்வதாயின், ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்: கருத்து வேறுபாடுகள் கருணையின் அடையாளமாக இருக்கின்றன. அவை இழப்பை ஏற்படுத்துவதில்லை. ஆனால், தீயது எதுவென்றால் அது சகிப்புத் தன்மை இல்லாததாகும்.

கருத்து வேறுபாடு ஏற்பட்டு, பிறகு சகிப்புத்தன்மை இல்லை என்றால் அதாவது அளவுக்கு மீறி கருத்தொற்றுமைக்கான ஆசைப்படுதல் கூடாது. அதாவது நான் என்ன கூறுகின்றேனோ அதற்கு அனைவரும் ஒத்துப் போக வேண்டும் என்று ஒவ்வொருவரும் விரும்புகிறார். கருத்து வேறுபாடு இல்லாமல் வெறும் கருத்தொற்றுமையே இருப்பது கூடாது. இன்னும் கூறுவதாயின், கருத்து வேறுபாடுகளும் முன்னேற்றத்திற்கான அடையாளங்கள் ஆகும். இந்த விஷயம் மனிதனிடம் உருவாகி விட்டால் பிறகு வெற்றிகள் மிகவும் அருகில் வந்து விடுகின்றன. பிறகு அன்னார் (ரலி) மனிதனிடம் பொறுத்துக் கொள்ளும் ஆற்றல் இருக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்கள்.

கருத்து வேறுபாடு தீய விஷயமாகும் என்று மக்கள் கூறுகிறார்கள். கருத்து வேறுபாடு தீய விஷயம் என்றால் பிறகு சகிப்புத்தன்மையின் பொருள் என்ன? கருத்து வேறுபாடு இருக்கும்பொழுதுதானே சகிப்புத்தன்மை இருக்கும். ஒரு விஷயத்தில் கருத்து வேறுபாடு இருக்கும் நேரத்தில் தான் பொறுத்துக் கொள்வதும் இருக்கும். அப்பொழுது மனிதன் பொறுத்துக் கொள்ள வேண்டும். தவறான முறையில் வேறு ஒருவருக்கு இழப்பை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்யக் கூடாது. எனவே இந்த விஷயத்தை எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும்.

அன்னார் (ரலி) இவ்வாறு கூறினார்கள்: எனவே உலகத்திற்கு எது தேவையோ அது சகிப்புத்தன்மையாகும். அதாவது, மக்கள் கொள்கை வேறுபாடு மற்றும் விதிகளின் வேறுபாட்டைக் கொண்டிருந்தும் கூட, ஒருவர் மற்றவருடன் அன்பு, நேசத்துடன் வாழ வேண்டும். தனக்கு நல்லதாக கருதக் கூடிய விஷயத்தின் பக்கம் மற்றவர்களை அழைப்பதற்கான உரிமை ஒவ்வொருவருக்கும் உள்ளதுதான்; ஏனெனில், தப்லீஃக் செய்யாமல் ஞானங்கள் முன்னேற முடியாது. ஆனால் எவருக்கும் உரிமையில்லாத விஷயம் எதுவென்றால், மற்றவர்களுடைய உள்ளங்கள் மாறுவதற்கு முன்னால் அவர்கள் நாவால் கூறுவதையும் அவர்களுடைய செயல்களையும் மாற்ற விரும்புவது ஆகும். அல்லது சில விஷயங்களில் அவருடன் கருத்து வேறுபாடு கொண்டிருப்பதன் காரணமாக அவருக்குத் துன்பம் கொடுப்பதற்கு முயற்சி செய்வது, கட்டாயப்படுத்துவது, நாவால் கூறுதலையும், செயல்களையும் மாற்றுவது ஆகிய இவை தவறாகும். உள்ளம் மாற வேண்டும். கட்டாயப்படுத்தினால் அது தவறாகும்.

பிறகு அன்னார் (ரலி) இதனையும் கூறியுள்ளார்கள்: இது போன்ற ஆன்மாவை உருவாக்குவதற்காகவே பள்ளிவாசல் கட்டப்படுகின்றது. இஸ்லாம் பள்ளிவாசலுக்கு பைத்துல்லாஹ் (அல்லாஹ்வின் இல்லம்) என்று பெயர் வைத்துள்ளது. அதாவது எப்படிப்பட்ட ஓர் இல்லம் என்றால், அதில் ஒருவர் மற்றவரோடு கொண்டிருக்கும் கருத்து வேறுபாடு காரணமாக அதிலிருந்து யாரையும் வெளியேற்றவோ அல்லது யாருக்கும் துன்பமிழைப்பதற்கோ மனிதனுக்கு உரிமை இல்லை. ஏனெனில், இது அவனது வீடு கிடையாது. மாறாக, இறை இல்லமாகும்.

ஆனால், பாகிஸ்தானி முல்லாக்கள் இன்றைய நாள்களில் நினைத்துக் கொண்டிருப்பது என்னவென்றால், இது நமது விருப்பமாகும். நாம் இஷ்டத்துக்கு என்ன வேண்டுமானாலும் கூறலாம். அஹ்மதிகள் பள்ளிவாசலுக்கு செல்வதிலும் தொந்தரவு கொடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறு இருப்பினும், அன்னார் (ரலி) கூறுகிறார்கள்: இது எந்தவொரு மனிதனுடைய வீடும் கிடையாது. மாறாக, இது இறையில்லமாகும். அந்த இறைவன் எவ்வாறு அவருக்கு இறைவனாக இருக்கின்றானோ அவ்வாறே அவருடைய எதிரிக்கும் இறைவன் ஆக இருக்கின்றான். அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:

وَمَنۡ اَظۡلَمُ مِمَّنۡ مَّنَعَ

مَسٰجِدَ اللّٰهِ اَنۡ يُّذۡكَرَ فِيۡهَا اسۡمُهٗ

பொருள்: அல்லாஹ்வை வணங்குவதற்காக கட்டப்பட்டுள்ள இல்லங்களில் இருந்து மக்களைத் தடுத்து, அவனை வணங்க விடாமல் செய்பவனை விடப் பெரிய அநீதி இழைப்பவன் யார்?(அல்பக்கரா: வசனம் 115)

இந்த அநீதியை இன்றைய நாட்களில், இஸ்லாம் என்ற பெயரில் பாகிஸ்தானி முல்லாக்கள் செய்து கொண்டிருக்கின்றார்கள். எவ்வாறாயினும், அன்னார் (ரலி) கூறுகிறார்கள்: வரலாற்றிலிருந்து நிரூபணமாகிறது. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் ஒருமுறை ஏமனின் கிறிஸ்தவர்களின் ஒரு குழு வந்தது. அது அன்னாருடன் உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது வழிபாட்டுக்கான நேரம் வந்து விட்டது. அவர்கள் வெளியே சென்று வழிபடுவதற்கு நபி (ஸல்) அவர்களிடம் அனுமதி கோரினார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வெளியே சென்று வழிபட வேண்டிய அவசியம் இல்லை. எங்களுடைய பள்ளிவாசலிலேயே வழிபட்டுக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

திருக்குர்ஆனின் கட்டளையின் மூலமாகவும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அமலிலிருந்தும் நிரூபணமாவதாவது, மேலான இறைவனை வணங்க விரும்பும் ஒவ்வொருவருக்காவும் இஸ்லாமிய பள்ளிவாசல்களின் கதவு திறந்திருக்கிறது. இஸ்லாமிய பள்ளிவாசல்கள் பல்வேறு மதங்களின் மக்களை ஒன்று திரட்டுவதற்கான மையப் புள்ளியாகும்.

பிறகு அன்னார் (ரலி) இதையும் கூறினார்கள்: நான் எடுத்துரைத்த, அதாவது அஹ்மதிய்யா ஜமாஅத் எடுத்துரைத்த ஆன்மாவுடன் அதே உணர்வுகளுடன் இந்தப் பள்ளிவாசலைக் கட்ட எண்ணியுள்ளோம். அதை நான் திறந்து வைக்கிறேன். இன்று நான் இதற்கான அடிக்கல் நாட்டுவதற்கு முன்னால் ஒரு விஷயத்தை அறிவிப்பு செய்ய விரும்புகிறேன். உலகத்தில் இறைவன் மீதான அன்பு உருவாக வேண்டும் என்பதற்காகவும், எது இல்லாமல் உண்மையான அமைதி மற்றும் உண்மையான முன்னேற்றம் கிடையாதோ அந்த மார்க்கத்தின் பக்கம் மக்கள் திரும்ப வேண்டும் என்பதற்காகவும் மட்டுமே மேலான இறைவனை வணங்குவதற்காகப் பள்ளிவாசல் கட்டப்படுகிறது. நாம் மேலான இறைவனை வணங்க விரும்பும் எவரையும் அதில் இறை வணக்கம் செய்ய விடாமல் ஒருபோதும் தடுக்க மாட்டோம். நிபந்தனை என்னவென்றால், அதன் நிர்வாகிகள் அதை நிர்வகிப்பதற்காக நிர்ணயித்திருக்கக் கூடிய அந்த சட்டத் திட்டங்களை அவர் கடைபிடிக்க வேண்டும். மேலும் எவர்கள் தமது மார்க்கத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக இந்தப் பள்ளிவாசல்களை உருவாக்குகிறார்களோ, அந்த மக்களின் இறை வணக்கத்தில் அவர் இடையூறு செய்யக் கூடாது என்பதும் நிபந்தனையாகும்.

எனக்கு உறுதியான நம்பிக்கை இருக்கின்றது. இந்தப் பள்ளிவாசல் மூலமாக உருவாக்கப்படும் மத நல்லிணக்கதின் ஆன்மா உலகத்தில் இருந்து குழப்பங்கள், சச்சரவுகளை அகற்றுவதாகும். அமைதி மற்றும் சமாதானத்தை நிலை நாட்டுவதற்கும் உதவும். மக்கள் போர்களையெல்லாம் விட்டுவிட்டு, அன்பு

*நபிமொழியிலிருந்து...*

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

நேசத்துடன் ஒருவர் மற்றவரோடு இருக்கக் கூடிய நாள்கள் விரைவில் வரும். அப்பொழுது, மனித குலம் முழுவதையும் படைத்தவன் ஒருவனே ஆவான் என்ற விஷயத்தை முழு உலகமும் உணர ஆரம்பிக்கும்.

எனவே அவர்கள் ஒருவர் மற்றவருடன் சகோதர, சகோதரிகளை விடவும் அதிகம் அன்பு, நேசத்துடன் இருக்க வேண்டும். ஒருவர் மற்றவரின் முன்னேற்றத்தில் தடையாக இருப்பதற்கு பகரமாக ஒருவர் மற்றவருக்கு முன்னேற்றத்தில் உதவி செய்ய வேண்டும். ஏனெனில்,எவ்வாறு ஒரு தந்தை தன் பிள்ளைகள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்வதை ஒருபோதும் விரும்ப மாட்டாரோ அவ்வாறே மேலான இறைவனும் அவனுடைய படைப்புகள் தங்களுக்குள் போர்கள் செய்வதில் மூழ்கி இருப்பதை ஒருபோதும் விரும்ப மாட்டான்.

பிறகு அன்னார் (ரலி) கூறுகிறார்கள்: ஏக இறைவனை விட்டு விலகுவதன் காரணமாகவே பரஸ்பர சண்டைகள் நிகழ்கின்றன. எனவே அல்லாஹ் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனரான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை இந்த நோக்கத்திற்காகவே அனுப்பியுள்ளான். அல்லாஹ்வை விட்டு விலகுவதனால் போர்கள் நடக்கின்றன. எனவே அனைவரையும் ஒன்று சேர்ப்பதற்காக, மக்களை இறைவன் பக்கம் திருப்புவதற்காக, ஒருவர் மற்றவருடனான கருத்து வேறுபாடுகளைக் களைவதற்காக ஒருவர் மற்றவருடன் ஒற்றுமை மற்றும் அன்பை உருவாக்குவதற்காக மேலான அல்லாஹ் இந்தக் காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பியுள்ளான்.

எனவே அஹ்மதிய்யா ஜமாஅத் இறையருளால் இந்த எல்லா இனச் சண்டைகளையும், அரசியல் சண்டைகளையும் அழிப்பதற்கு முயற்சி செய்து கொண்டே இருக்கும். எல்லா நாடுகளிலும் பல்வேறு மதங்களைச் சேர்ந்த நல்லுள்ளம் கொண்ட மக்கள், அமைதியை நிலைநாட்டுவதற்கான இந்த முயற்சிகளில் அதற்கு உதவியாளர்களாக இருப்பார்கள் என்று நாம் நம்புகிறோம். அதற்கான அறிகுறிகளும் தென்படுகின்றன என்று அன்னார் (ரலி) கூறினார்கள். (அப்பொழுது அன்னார் கூறியது போன்று அங்கு பல்வேறு தரப்பு மக்கள் வந்திருந்தார்கள்)

அன்னார் (ரலி) கூறினார்கள்: பல்வேறு சமுதாயங்களின் கண்ணியத்திற்குரிய மக்கள் இன்று (இங்கு) ஒன்று கூடியுள்ளார்கள். இதிலிருந்து நாம் ஒன்று சேர்ந்து கொண்டிருக்கின்றோம் என்பது வெளிப்படுகிறது. இன்று நூறு ஆண்டுகளுக்குப் பிறகும் கூட இந்தக் காலத்திலும் நாம் இதையே பார்த்து உள்ளோம். அதாவது, இன்றும் அல்லாஹ்வின் அருளால் பல மக்கள் பல்வேறு சமுதாயங்களைச் சேர்ந்த மக்கள், பல்வேறு மதங்களைச் சேர்ந்த மக்கள் வரும்பொழுது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தளத்தில் நாங்கள் அனைவரும் ஒருவராகி விடுகின்றோம் என்று கூறுகின்றார்கள். இந்தப் பள்ளிவாசலில் இங்கு நீங்கள் (அந்தப்) பள்ளிவாசலுக்கு செல்லக் கூடியவர்கள், அங்கு ஃபஸ்ல் பள்ளிவாசலில் தொழக் கூடியவர்கள் பார்த்துக் கொண்டிருப்பீர்கள்; பார்த்தும் இருப்பீர்கள். அதாவது, ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஒரு பலகையைப் பதியச் செய்துள்ளார்கள்.

அதில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது; இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தின் காதியானைத் தலைமையகமாகக் கொண்ட அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைவரும், இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹுமான மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத் (ரலி) ஆகிய நான் மேலான இறைவனின் விருப்பத்தைப் பெறுவதற்காக இங்கிலாந்தில் இறைவனை நினைவு கூர்தல் ஓங்க வேண்டும் என்பதற்காக, எமக்குக் கிடைத்த அந்த அருட்களிலிருந்து இங்கிலாந்து மக்களும் பலன் பெற வேண்டும் என்பதற்காக, இன்று 20 ரபீயுல் அவ்வல் ஹிஜ்ரி 1343 ஆம் ஆண்டு இந்தப் பள்ளிவாசலுக்கு அடிக்கல் நாட்டுகிறேன். மேலும், இறைவனிடம் துஆ செய்கிறேன். அந்த மேலான இறைவன் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆண்கள் மற்றும் பெண்களின் இந்தக் களங்கமற்ற முயற்சியை ஏற்றுக் கொள்வானாக! இந்தப் பள்ளிவாசல் நிரம்பி இருப்பதற்கான ஏற்பாடு செய்வானாக!

நிரந்தரமாக இந்தப் பள்ளிவாசலை நேர்மை, இறையச்சம், நீதி மற்றும் அன்பின் சிந்தனைகளைப் பரப்பக் கூடிய மையமாக ஆக்குவானாக! ஹஸ்ரத் காத்தமுன் நபிய்யீன் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாரது நிழலான வடிவில். அல்லாஹ்வின் நபியான மற்றும் முஹம்மத் (ஸல்) அவர்களின் பிரதிநிதியான வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் அஹ்மத் (அலை) அவர்களின் ஒளிமிக்க கதிர்களை இந்த நாட்டிலும் மற்றும் மற்ற நாடுகளிலும் பரப்புவதற்காக இந்த இடம் ஆன்மிக சூரியனின் பணியைச் செய்யட்டுமாக! இறைவா அவ்வாறே ஆகச் செய்வாயாக!
19 அக்டோபர் 1924.

இந்த அனைத்து விஷயங்களும் எழுதப்பட்டுள்ளன. இதை நீங்கள் படித்துக் கொண்டிருப்பீர்கள். அல்லாஹ்வின் அருளால் இந்த துஆக்களுடன் இந்த ஃபஸ்ல் பள்ளிவாசலுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. பல்வேறு பத்திரிகைகள் இதை மிக அதிகமாகப் பரப்பின. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் சொற்பொழிவுகளின் பல்வேறு மேற்கோள்களைத் தம்முடைய பத்திரிகைகளில் வெளியிட்டன. ஜமாஅத்தின் பணியைப் பெரிதும் பாராட்டின. அன்னாரது சொற்பொழிவில் இருந்து, நான் சில விஷயங்களை எடுத்துக் கூறியுள்ளேன். மிகவும் இரத்தினச் சுருக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறேன். விளக்கம் மிக அதிகமாக உள்ளது. எவ்வாறாயினும், படிக்க விரும்புவர்கள் அசல் பதிவிலிருந்து படித்துக் கொள்ளலாம்.

இறுதியில் இந்தப் பள்ளிவாசல் கட்டப்பட்டது. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு 1926-இல் இது திறக்கப்பட்டது. இதைத் திறந்து வைப்பதற்காக ஷாஹ் ஃபைஸல் வர இருந்தார். ஃபைஸல் இளவரசராக இருந்தார். அவர் தந்தை செல்லுங்கள் என்று சொன்னார். அவருக்கு வர அனுமதி கிடைத்து விட்டிருந்தது. ஆனால், பிறகு முஸ்லிம்களுடைய எதிர் நடவடிக்கையின் காரணமாக அரசர் அவரைத் தடுத்து விட்டார். பிறகு ஷேக் அப்துல் காதிர் ஸாஹிப் அவர்கள் அதைத் திறந்து வைத்தார்கள். அவர்கள் மிகத் தெளிவான சொற்களில் இவ்வாறு கூறினார்கள்: நான் அஹ்மதி அல்ல; ஆனால், இவ்வாறு இருந்தும் நாம் இஸ்லாத்திற்குத் தொண்டு செய்ய விரும்புகின்றோம் என்பதனால் நாம் இந்தக் கருத்து வேறுபாடுகளிலிருந்து வெளியேறி ஒருவர் மற்றவருக்கு உதவி புரிய வேண்டும்.

எவ்வாறு இருப்பினும், இது அவர்களின் துணிவு மற்றும் பரந்த மனப்பான்மையாகும். அதை அவர்கள் வெளிப்படுத்தினார்கள். அல்லாஹ் அவர்களுக்கும் இதற்கான நற்கூலி வழங்குவானாக!

எவ்வாறாயினும், இதுதான் ஃபஸ்ல் பள்ளிவாசலின் சுருக்கமான வரலாறு ஆகும். மேற்கத்திய நாடுகளில் இஸ்லாம் பரவ வேண்டும் என்பதே இந்தப் பள்ளிவாசலைக் கட்டுவதற்கான காரணமாக இருந்தது.எனவே நான் கூறியது போன்று இன்று நாம் நூறாண்டு நிறைவடைந்ததை ஒட்டி நிகழ்ச்சி நடத்துகிறோம். ஆக, இந்த நிகழ்ச்சி ஒன்றும் எந்த உலக நோக்கத்திற்காகவும் அல்ல. மாறாக, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் கூற்றுகள் மற்றும் விஷயங்களில் இருந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுகள் மற்றும் விஷயங்களில் இருந்து நான் எடுத்துக் கூறியது போன்று, இந்தப் பள்ளிவாசலோ அல்லாஹ்வை வணங்குவதற்காக மக்கள் ஒன்று கூடக் கூடிய இடமாகும்.

அவர்கள் ஓரிறைவனை வணங்க வேண்டும்;ஒருவர் மற்றவருக்கான உரிமைகளை செலுத்தக் கூடியவர்களாக இருக்க வேண்டும். தம்மை ஆன்மிக முறையில் சீர்திருத்திக் கொள்ளவும் வேண்டும். தம்முடைய உயர் நல்லொழுக்கங்களையும் உயர்த்த வேண்டும். மக்கள் இறைவனை மறந்து கொண்டிருக்கக் கூடிய இந்த காலத்தில் பள்ளிவாசலின் முக்கியத்துவம் மிகவும் அதிகரித்து விட்டது. அல்லாஹ்வின் போதனைகளுக்கு ஏற்ப மனிதனின் படைப்புக்கான நோக்கம் இறை வணக்கம் ஆகும். அதை விட்டே நாம் விலகிச் சென்று கொண்டிருக்கின்றோம். எனவே இன்று நாம் இந்த விஷயத்திற்காக முயற்சி செய்ய வேண்டும். அதாவது, இறை வணக்கத்திற்கான உரிமையை செலுத்தக் கூடியவர்களாக ஆக வேண்டும். நமது சுற்றுச் சூழலிலும் நமது அக்கம் பக்கத்து மக்களுக்கும் நமது சந்ததிகளுக்கும் நாம் அல்லாஹ்வை வணங்குவதிலும், அவனுக்கான உரிமையை நிறைவேற்றுவதிலும், அவனுடைய படைப்பினங்களுக்கான உரிமையை நிலைநாட்டுவதிலும் அவனுடைய கட்டளைகளின்படி நாம் நடப்பதிலும்தான் உண்மையான வாழ்வும், நாம் நிலைத்திருப்பதும் அடங்கியிருக்கிறது என்ற விஷயத்தின் பக்கம் கவனமூட்ட வேண்டும்.

அப்பொழுதுதான் நம்மால் உலகை அமைதி, சமாதானம் மற்றும் சமரசத்துடன் வெற்றியுடன் இயங்கச் செய்ய முடியும். மேலும், இதில் வாழ முடியும்.

இல்லையென்றால் இங்கு குழப்பங்கள் மற்றும் சண்டைகளைத் தவிர வேறு எதுவும் இல்லை. அதன் காட்சிகளை நாம் இன்றைய நாள்களில் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். எனவே இந்த நோக்கத்தை ஒவ்வோர் அஹ்மதியும் நினைவில் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

எதை நீங்கள் உங்களுக்காக விரும்புகின்றீர்களோ அதை மற்றவர்களுக்காக விரும்புங்கள். ஆக, இந்தப் போதனையின் அடிப்படையில் ஒவ்வோர் அஹ்மதியின்

*திருக்குர்ஆனிலிருந்து...*

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

கடமை என்னவென்றால், இந்தத் தப்லீஃகை இந்தத் தூதுச் செய்தியை அன்பு, நேசம் மற்றும் அமைதியோடு இருப்பதற்காக இஸ்லாத்தின் தூதுச் செய்தியை, சமாதானம் மற்றும் சமரசத்திற்கான இந்தத் தூதுச் செய்தியை உலகிற்கு எடுத்துக் கூற வேண்டும். அதற்குத் தெரியப்படுத்த வேண்டும்.

மேலும் இந்த விஷயத்தைப் பரப்ப வேண்டும். அதாவது, இதுவே மனிதன் நிலைத்திருப்பதற்கான உத்தரவாதமாகும். இதைத் தவிர வேறு எதுவும் கிடையாது. இல்லையென்றால் வருங்கால சந்ததி அழிவு, நாசம் எனும் குழியில் விழுந்து கொண்டே செல்லும். இந்தப் போர்களின் காரணமாக இனி பிறக்கப் போகும் சந்ததிகள் உடல் ஊனமுற்றவர்களாகவும், முடவர்களாகவும் பிறப்பது ஒன்றும் தொலைவில் இல்லை. எனவே இந்த வகையிலும் மக்களை எச்சரிக்க வேண்டியது அவசியமாகும்.

அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த பள்ளிவாசலின் உரிமையை நிறைவேற்றுபவர்களாக ஆகுவதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக! நாம் ஒவ்வொரு பள்ளிவாசலின் உரிமையையும் நிறைவேற்றக் கூடியவர்களாக இருப்போமாக! இந்தப் பள்ளிவாசல் மட்டும் கிடையாது. அதற்கும் மேற்பட்டு ஒவ்வோர் அஹ்மதியும் எல்லா இடத்திலும் எல்லாப் பள்ளிவாசல்களையும் நிரப்ப வேண்டும். இந்த உரிமையை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். நம்முடைய இறை வணக்கங்களுக்கான உரிமைகளை நிறைவேற்றக் கூடியவர்களாக ஆவோமாக! அல்லாஹ்வின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கான உரிமையை நிறைவேற்றக் கூடியவர்களாக இருப்போமாக!

இஸ்லாத்தின் தப்லீஃக்கான உரிமையை நிறைவேற்றக் கூடியவர்களாக இருப்போமாக! இதற்காகத்தான் அல்லாஹ் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை அனுப்பினான். இதற்காகத்தான் இக்காலத்தில் அன்னாரின் உண்மை ஊழியரை அனுப்பினான். அதாவது, இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்கான காலகட்டம் மீண்டும் துவங்க வேண்டும். உலகத்தில் இஸ்லாம் மற்றும் ஓரிறைவனின் ஆட்சி நிலைபெற வேண்டும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கொடி உலகத்தில் பறக்க வேண்டும். ஆக, நாம் உண்மையான முறையில் அத்தகைய முஸ்லிம்கள் ஆகி விடுவோமாக! மேலான அல்லாஹ் நம் அனைவருக்கும் அதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக!

தமிழாக்கம்
மவ்லவி அத்தாவுல் முஃக்னீ

* * * * * * * *

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த *TOLL FREE* எண்ணில்
∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

12- ம் பக்கத் தொடர்ச்சி..
(குத்பா பேருரை 25.11.24)

பனூ நழீர் கோத்திரத்தின் தலைவனான ஹுயய் பின் அக்தப் வந்த போது அவன், பெருமானார் (ஸல்) அவர்களை பார்த்து, முஹம்மதே! உங்களை ஏன் எதிர்த்தேன் என்பதில் எனக்கு வருத்தம் இல்லை ; ஆனால், விஷயம் என்னவென்றால், எவர் இறைவனை விட்டு விடுவாரோ அவரை இறைவனும் விட்டு விடுவான் என்று கூறிவிட்டு பிறகு மக்களை பார்த்து, இறை கட்டளைக்கு முன்னால் எந்த விதிவிலக்கும் கிடையாது; இது அவனுடைய கட்டளையும், அவனுடைய விதியும் ஆகும் என்று கூறினான். அதேபோன்று கஅப் பின் அஸத் கொல்லப்படுவதற்காக கொண்டு வரப்பட்டான். பனூ குறைழா உடைய தலைவரான கஅப் பின் அஸது கொல்லப்படுவதற்காக மைதானத்திற்கு கொண்டு வரப்பட்டபோது, பெருமானார் (ஸல்) அவர்கள் முஸ்லிமாகிவிடுவாறு அவருக்கு சூசகமாக கூறினார்கள். அதற்கு, அவர் அபூ காஸிமே! நான் முஸ்லிமாகி இருப்பேன்தான். ஆனால் மரணத்திற்கு அஞ்சி நான் முஸ்லிமாகி விட்டேன் என்று மக்கள் கூறுவார்கள். ஆகவே என்னை யூத மார்க்கத்திலேயே மரணிக்க விட்டு விடுங்கள் என்று கூறினார்.

ரிஃபாஆ எனும் ஓர் யூதருடைய மன்னிப்பைக் குறித்தும் குறிப்பு காணப்படுகிறது. இதைக் குறித்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: ரிஃபாஆ எனும் பெயர் கொண்ட ஓர் யூதர் இருந்தார். அவர் கருணை உள்ளம் கொண்ட ஒரு முஸ்லிம் பெண்ணிடத்தில் மன்றாடி அந்தப் பெண்மணியை தமக்காக பரிந்துரை செய்வதற்காக முன்னிறுத்தினார். அந்த முஸ்லிம் பெண்மணி பரிந்துரை செய்ததன் காரணமாக பெருமானார் (ஸல்) அவர்கள் ரிஃபாஆவை மன்னித்து விட்டார்கள். சுருக்கமாக, அந்நேரத்தில், யாருடைய பரிந்துரையும் அன்னாரிடத்தில் வந்தாலும் அன்னார் (ஸல்) உடனே மன்னித்து வந்தார்கள். ஸஅது (ரலி) அவர்கள் வழங்கிய தீர்ப்பின் காரணமாக அன்னார் (ஸல்) கட்டாயத்திற்கு ஆளாகி இருந்தார்கள் என்பது இதிலிருந்து தெரிய வருகிறது. மற்றபடி, யூதர்கள் கொலை செய்யப்பட வேண்டும் என்பதன் பக்கம் அன்னாருடைய உள்ளம் ஈர்க்கப்பட்டிருக்கவில்லை என்பதற்கு இது சான்றாகும்.

பெருமானார் (ஸல்) அவர்கள் யூதர்கள் மீது அநீதி இழைத்தார்கள் என்று கூறப்படுகிறது.அவதூறுக்கு இது தெளிவான பதிலாகும்.

மேற்கூறப்பட்ட முறையில் இவ்வாறு பனூ குறைழா உடைய ஆண்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருந்தார்கள். எந்த அளவுக்கு என்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த தண்டனை முடியும் வரை அங்கு இருந்தார்கள். சூரிய ஒளி மறையும் வரை அவர்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருந்தார்கள். பிறகு மண் இட்டு அந்தக் குழிகள் மூடப்பட்டன. இவை அனைத்தும் ஹஸ்ரத் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களின் கண்களுக்கு முன்னால் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருந்தன. அல்லாஹ் ஹஸ்ரத் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களின் துஆவை ஏற்றுக் கொண்டு அவர்களின் கண்களுக்கு குளிர்ச்சியை வழங்கினான். வரலாற்று ரீதியிலான அறிவிப்பின் அடிப்படையில் பார்க்கும்போது, பெண்களுள் நுபா(த்) தா எனும் ஒரு பெண் மட்டுமே கொல்லப்பட்டாள். அவள் பனூ குறைழா உடைய ஹகம் எனும் ஒருவனின் மனைவி ஆவாள். ஹஸ்ரத் கல்லாத் (ரலி) எனும் ஒரு பெண் ஸஹாபி பனூ குறைழா உடைய கோட்டைச் சுவருக்கு அருகில் அமர்ந்திருந்தார். அந்தப் பெண் மேலிருந்து பாறையை எறிந்து அந்த ஸஹாபியைக் கொன்று விட்டாள். அந்தக் கொலைக்கு தண்டனையாக அந்தப் பெண் கொலை செய்யப்பட்டாள். ஆனால், சில வரலாற்று ஆசிரியர்கள் இந்த அறிவிப்பை ஏற்றுக் கொள்வது கிடையாது. அவர்களைப் பொறுத்தவரை பனூ நளீர் அல்லது கைபருடைய சில அறிவிப்புகள் இந்த சம்பவத்துடன் கலந்து விட்டதன் காரணமாகவும், வேறு சில காரணங்களின் காரணமாகவும் அந்தப் பெண் கொல்லப்பட்ட சம்பவம் உண்மையில்லை என்று கூறுகிறார்கள். அல்லாஹ்வே நன்கறிவான்.

ரீஹானா பின்த் ஸைது நஸரியா எனும் பெண்மணியை பற்றிய குறிப்பு காணக்கிடைக்கின்றது. பனூ குறைழா உடைய பெண் கைதிகளும், பிள்ளைகளும் மதீனாவில் முஸ்லிம்களுக்கு இடையே பங்கிட்டு கொடுக்கப்பட்டார்கள். அவர்களுள் பனூ நழீரைச் சேர்ந்த ரீஹானா பின்த் ஸைது என்ற ஒரு பெண்ணும் இருந்தாள். அவள் பனூ குறைழாவைச் சார்ந்த ஹகம் எனும் ஒரு நபரை திருமணம் செய்திருந்தாள். பெருமானார் (ஸல்) அவர்கள் அந்தப் பெண்ணை தமக்காக தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். சிலரைப் பொறுத்த வரை அந்தப் பெண் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டாள் என்றும், சிலரைப் பொருத்த வரை பெருமானார் (ஸல்) அவர்கள் அந்தப் பெண்ணை அடிமைப் பெண்ணாக வைத்திருந்தார்கள் என்றும், சிலரைப் பொருத்தவரை பெருமானார் (ஸல்) அவர்கள் அப்பெண்ணை திருமணம் புரிந்தார்கள் என்றும் கூறப்படுகின்றது.

பல்வேறு வகையான அறிவிப்புகள் உள்ளன. எது சரி? எது தவறு? என்று அடுத்து வருகின்ற விளக்கத்தில் புரிய முடிகின்றது. இந்த அறிவிப்புகளை ஆய்வு செய்து பார்க்கும்போது வரலாற்று ஆசிரியர்களுக்கு இதில் ஏற்பட்ட தவறு என்னவென்றால், முதல் விஷயம் இந்த அறிவிப்புகள் சம்பவத்திற்கு மாற்றமானதாகவும், இட்டுக்கட்டப்பட்டவையாகவும் உள்ளன. அதில் ஏதேனும் உண்மை இருக்கும் என்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் அந்தப் பெண்மணியை விடுதலை செய்து விட்டார்கள் என்பதும், அந்தப் பெண்மணி தம் பெற்றோருடைய வீட்டுக்குச் சென்று அங்கேயே மரணமடைந்தாள் என்ற அளவுக்கு மட்டுமே ஆகும்.ஒரு வாதத்திற்காக இந்த அறிவிப்புகளை சரியானது என்று ஏற்றுக் கொண்டாலும், பெருமானார் (ஸல்) அவர்கள் அந்தப் பெண்ணை திருமணம் செய்தார்கள் என்ற அளவுக்கு மட்டுமே ஏற்றுக் கொள்ள வேண்டியது வரும்.

**(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்.......)**

தமிழாக்கம்
மவ்லவி APA தாரிக் அஹ்மத்

* * * * * * * *

# ஜுமுஆ பேருரை

பனூ குறைழா போரின் முடிவுற்றபோது வழங்கப்பட்ட தண்டனை
மற்றும் இதர சூழ்நிலைகளும் சம்பவங்களும்

பனூ குறைழா விவகாரத்தில் தீர்ப்பு வழங்குவதற்காக ஹஸ்ரத் ஸஅத் (ரலி) வந்த போது, உங்களது தலைவருக்கு கண்ணியம் அளிக்கும் விதமாக எழுந்து நில்லுங்கள் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் மக்களிடம் கூறினார்கள். இன்னோர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது: உங்களில் சிறந்த மனிதருக்காக எழுந்து நில்லுங்கள் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் மக்களிடம், கூறினார்கள்

அவ்ஸ் கோத்திரத்தின் தரப்பிலிருந்து பனூ குறைழாவிற்காக பரிந்துரை செய்யப்பட்டதை செவியுற்றபோது ஹஸ்ரத் ஸஅத் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இப்போது தான் அல்லாஹ்வின் விஷயத்தில் பழிப்பவர்களின் பழிப்பை பொருட்படுத்தாமல் இருக்க இந்த ஸஅதுக்கு நேரம் வந்துள்ளது

பனூ குறைழா தொடர்பாக ஹஸ்ரத் ஸஅத் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் அவர்கள் தொடர்பாக இந்த தீர்ப்பை வழங்குகின்றேன்: அதாவது, அவர்களுடைய பருவ வயதை அடைந்த ஆண்கள் கொல்லப்பட வேண்டும் ; அவர்களின் பெண்களும், குழந்தைகளும் கைது செய்யப்பட வேண்டும் ;அவர்களின் செல்வம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் ; அவர்களின் வீடுகள் முஹாஜிர்களுக்கு கொடுக்கப்பட வேண்டும். அன்ஸாருக்கு கொடுக்கப்படக் கூடாது

இதைக் கேட்ட பெருமானார் (ஸல்) அவர்கள், ஸஅதே! உங்களுடைய தீர்ப்பு ஏழு வானங்களுக்கு மேலிருக்கும் அல்லாஹ் வழங்கிய தீர்ப்பை போன்று இருக்கின்றது என்று கூறினார்கள்

ஓர் அறிவிப்பில் வருகிறது: ஹஸ்ரத் ஸஅத் (ரலி) அவர்களின் தீர்ப்பைக் குறித்து பெருமானார் (ஸல்) அவர்கள் கூறும் போது, இந்த தீர்ப்பை குறித்து வானவர்கள் எனக்கு ஸஹ்ரீ நேரத்தில் கூறியிருந்தார்கள் என்றார்கள்

---

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 25 அக்டோபர் 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1403 ஆண்டு **அகா** மாதம் **25 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

அகழ்ப் போரின் போது பனூ குறைழா உடன்படிக்கையை முறித்ததன் காரணமாக முஸ்லிம்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தினார்கள். ஆகவே உடன்படிக்கையை முறித்ததற்கான தண்டனையை வழங்கும் பொருட்டு அகழ்ப் போருக்குப் பிறகு அவர்களின் கோட்டைகளை முற்றுகையிட்டது தொடர்பாக (கடந்த குத்பாவில்) கூறப்பட்டது. இதன் மேற்கொண்டு விபரம் இவ்வாறு வருகிறது; முற்றுகை தீவிரமான போது பெருமானார் (ஸல்) அவர்களின் தீர்ப்புக்கு இணங்கி பனூ குறைழா கோட்டைகளை விட்டு கீழே இறங்கினார்கள்.

பனூ குறைழா கோட்டைகளின் முற்றுகை எத்தனை நாட்கள் இருந்தது என்பதை பற்றி பல்வேறு அறிவிப்புகள் காண கிடைக்கின்றன. சில அறிவிப்புகளில் 10 நாட்கள் என்றும், சிலவற்றில் 15 நாட்கள் என்றும், சிலவற்றில் 14 நாட்கள் என்றும், சிலவற்றில் 20 நாட்கள் என்றும் கூறப்பட்டுள்ளன. ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் (ரலி) அவர்கள் பல்வேறு வரலாற்று நூல்களில் உள்ள அறிவிப்புகளை ஆராய்ந்த பிறகு இந்த முற்றுகைக்கான காலகட்டம் ஏறக்குறைய 20 நாட்கள் இருந்தது என்று கூறியுள்ளார்கள்.

அந்தத் தீர்ப்புக்கு ஹஸ்ரத் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்கள் நீதிபதியாக நியமிக்கப்பட்டார்கள். அதன் விபரம் என்னவென்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் யூதர்களை கைது செய்யுமாறு கட்டளையிட்டார்கள். ஆகவே அவர்கள் கயிறுகளில் பிணைக்கப்பட்டார்கள். இந்தப் பணியை கண்காணிக்கும் வேலையை ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லிமா (ரலி) அவர்கள் செய்தார்கள். பெண்களும், குழந்தைகளும் கோட்டைகளை விட்டு வெளியேற்றப்பட்டார்கள். அவர்கள் ஒரு பக்கமாக கொண்டு செல்லப்பட்டார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸலாம் (ரலி) அவர்கள் அதற்கு கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்கள். யூதர்களின் கோட்டைகளில் எவையெல்லாம் இருந்தனவோ அவை அனைத்தும் ஒன்று திரட்டப்பட்டன. உதாரணமாக, ஆயுதங்கள், பொருட்கள், உடைகள் போன்வை. அங்கிருந்து 1500 தோல் கேடயங்களும், பல பொருட்களும் கிடைத்தன. அவை அனைத்தும் கீழே கொட்டப்பட்டன. அதிகமான எண்ணிக்கையில் ஒட்டகங்களும், மற்ற கால்நடைகளும் இருந்தன. அவை அனைத்தும் ஒன்று சேர்க்கப்பட்டன. அவ்ஸ் கோத்திரத்தைச் சேர்ந்த செல்வாக்குமிக்கவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! பனூ குறைழா எங்களுடைய நட்புக் கோத்திரம் ஆவார்கள்; உடன்படிக்கையை முறித்ததன் காரணமாக, எங்களுடைய நட்புக் கோத்திரமான அவர்களும் வெட்கித் தலை குனிந்துள்ளார்கள். எங்களுக்காக அவர்களை மன்னித்து விடுங்கள் என்று வேண்டினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அமைதியாக அமர்ந்திருந்தார்கள். எதுவரை என்றால், அவ்ஸ் கோத்திரத்தின் வலியுறுத்தல் அதிகரித்துக் கொண்டே சென்றது. அவ்ஸ் கோத்திரத்தைச் சேர்ந்த அனைவருமே வந்து மன்றாட ஆரம்பித்த போது, பெருமானார் (ஸல்) அவர்கள் அம்மக்களிடம், யூதர்களை குறித்து தீர்ப்பு வழங்கும் பொறுப்பு உங்களில் ஒருவரிடம் ஒப்படைக்கப்படுவதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் அனைவரும் நிச்சயமாக ஏற்றுக் கொள்கிறோம் என்று கூறினார்கள். இந்த விவகாரம் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களிடத்தில் ஒப்படைக்கப்படுகிறது என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

இன்னோர் அறிவிப்பில் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது: அதாவது பெருமானார் (ஸல்) அவர்கள் அம்மக்களிடம், என்னுடைய ஸஹாபிகளில் எவரை விரும்புகிறீர்களோ அவரை தீர்ப்புக்காக தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறியபோது அம்மக்கள் ஹஸ்ரத் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களை தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்களும், அதற்கு ஒப்புக் கொண்டார்கள். ஹஸ்ரத் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்கள் அவ்ஸ் கோத்திரத்தின் தலைவராக இருந்தார்கள். மேலும் பனூ குறைழாவின் நட்புக் கோத்திரத்தைச் சேர்ந்தவராகவும் இருந்தார்கள். இதன் காரணமாக அவ்ஸ் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் மனநிம்மதி அடைந்ததுடன் மகிழ்ச்சியும் அடைந்தார்கள். ஏனெனில், இப்பொழுது விவகாரம் தமது கைகளில் உள்ளது என்று அவர்கள் கருதிக் கொண்டார்கள். நட்புக் கோத்திரம் கருத்தில் கொள்ளப்படுவது அரேபிய மரபு ஆக இருந்தது. ஆனால், இறை நியதியோ வேறொன்றாக இருந்தது. அது வேறு வகையில் தீர்ப்பு வழங்கியிருந்தது. ஹஸ்ரத் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களின் பரிசுத்தமான தூய உள்ளம் அனைத்து உறவுகளையும், தொடர்புகளையும் விட இறைவனுக்கும் அவனது தூதருக்கும் முன்னுரிமை கொடுத்தது. ஹஸ்ரத் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்கள் அப்போது மதீனாவில் பள்ளிவாசலுக்குள் ருஃபைதா

அஸ்லமியா (எனும் பெண்மணி) யுடைய கூடாரத்தில் இருந்தார்கள். அப்பெண்மணி காயமுற்றவர்களுக்கு மருந்திட்டுக் கொண்டிருந்தார்கள். பள்ளிவாசலுக்குள்ளேயே அவர்களுக்கு கூடாரம் அமைக்கப்பட்டிருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களை அந்தக் கூடாரத்தில் தங்க வைத்திருந்தார்கள். அதன் மூலமாக அவர்களின் சிகிச்சையை மேற்பார்வை இடுவதற்கும், எளிதான வகையில் அவர்களை நலம் விசாரிக்க செல்வதற்காகவும் அவ்வாறு செய்திருந்தார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த விவகாரத்தை ஹஸ்ரத் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களிடத்தில் ஒப்படைத்தபோது, அவ்ஸ் கோத்திரத்தார்கள் அவர்களிடம் சென்றார்கள். அவர்களை ஒரு கழுதையில் அழைத்து வந்தார்கள். கழுதையின் மேல் விரிப்பாக பேரித்த மரத்தின் ஓலை இருந்தது. அந்த விரிப்புக்கு மேலே தோலினால் ஆன மெத்தை வைக்கப்பட்டிருந்தது. கழுதையின் உடைய கடிவாளமும் பேரித்த மரத்தின் கயிறாக இருந்தது. ஹஸ்ரத் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்கள் பருமனான உடலைக் கொண்ட இளைஞராக இருந்தார்கள். ஹஸ்ரத் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களைப் பார்த்து, அபூ அம்ர் (ரலி) அவர்களே! பெருமானார் (ஸல்) அவர்கள் அவ்ஸ் கோத்திரத்தின் நட்புக் கோத்திரமான பனூ குறைழாவின் விவகாரத்தை தங்களிடத்தில் ஒப்படைத்துள்ளார்கள். அதன் மூலமாக தாங்கள் அவர்களுடன் நல்ல விதத்தில் நடந்து கொள்ள வேண்டும் என்பதற்காக. ஆகவே தாங்கள் அவர்கள் மீது கருணை காட்ட வேண்டும் என்று கூறினார்கள். அப்போது இன்னும் அதிகமான எண்ணிக்கையில் மக்கள் ஒன்று கூட ஆரம்பித்தார்கள். ஆனால், ஹஸ்ரத் ஸஅத் (ரலி) அவர்கள் அமைதியாக இருந்தார்கள். மக்களுடைய வலியுறுத்தல் அதிகமான போது, இப்போது தான் அல்லாஹ்வின் விஷயத்தில் பழிப்பவர்களின் பழிப்பை பொருட்படுத்தாமல் இருக்க இந்த ஸஅதுக்கு நேரம் வந்துள்ளது என்று ஹஸ்ரத் ஸஅத் (ரலி) அவர்கள் அந்த மக்களிடம் கூறினார்கள். அதற்குப் பிறகு ஹஸ்ரத் ஸஅத் (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் சென்றார்கள். அன்னாருக்கு அருகிலும் மக்கள் அமர்ந்து இருந்தார்கள். ஹஸ்ரத் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்கள் வருகை தந்ததைக் குறித்து புகாரீ மற்றும் முஸ்லிம் ஹதீஸ் நூல்களில் இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பெருமானார் (ஸல்) அவர்கள் அமர்ந்திருந்த பள்ளிவாசலுக்கு அருகில் ஹஸ்ரத் ஸஅத் (ரலி) வந்த போது - அந்த பள்ளிவாசல் பனூ குறைழா முற்றுகையின் போது, தொழுகைக்காக ஆயத்தம் செய்யப்பட்டிருந்தது. அவர்களை கண்ட பெருமானார் (ஸல்) அவர்கள் மக்களிடம், உங்களது தலைவருக்கு கண்ணியம் அளிக்கும் விதமாக எழுந்து நில்லுங்கள் என்று கூறினார்கள்.

இன்னோர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது: பெருமானார் (ஸல்) அவர்கள் மக்களிடம், உங்களில் சிறந்த மனிதருக்காக எழுந்து நில்லுங்கள் என்று கூறினார்கள். பனூ அப்துல் அஷ்அல் கோத்திரத்தைச் சார்ந்த மக்கள் கூறுகிறார்கள்: நாங்கள் ஹஸ்ரத் ஸஅத் (ரலி) அவர்களுக்காக இரு வரிசையாக அணிவகுத்து நின்றோம். எங்களில் ஒவ்வொருவரும் அவர்களை நல்வரவு கூறி வரவேற்றார்கள். எந்த அளவுக்கு என்றால், அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி விட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் ஸஅதே! இவர்களுக்கு மத்தியில் தீர்ப்பு வழங்குங்கள் என்று கூறினார்கள். அதற்கு, அல்லாஹ்வும், அவனது தூதரும் தீர்ப்பு வழங்குவதற்கு அதிக உரிமை படைத்தவர்கள் என்று கூறினார்கள். இவர்கள் விஷயத்தில் தீர்ப்பு வழங்குவதற்காக நிச்சயமாக அல்லாஹ் உங்களை நீதிபதியாக ஆக்கி உள்ளான் என்று ஸஅதிடம் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது அவ்ஸ் கோத்திரத்தைச் சேர்ந்த மக்கள், அபூ அம்ர் (ரலி) அவர்களே! பெருமானார் (ஸல்) அவர்கள் உங்களுடைய நட்புக் கோத்திரங்களின் தீர்ப்பை உங்களிடத்தில் ஒப்படைத்துள்ளார்கள். ஆகவே தாங்கள் அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள்; அவர்களின் துயரங்களை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். பனூ குறைழா விஷயத்தில் என்னுடைய தீர்ப்பை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா? என்று ஹஸ்ரத் ஸஅத் (ரலி) அவர்கள் கேட்டார்கள். நிச்சயமாக ஏற்றுக் கொள்வோம் ; நீங்கள் எங்களுக்கு மத்தியில் இல்லாத நேரத்தில் இருந்தே நாங்கள் உங்களுடைய தீர்ப்பை ஏற்றுக் கொள்வதற்கு ஆயத்தமாக இருக்கிறோம் என்று அவர்கள் கூறினர். அதாவது நீங்கள் இங்கு இல்லாத சமயத்திலும் கூட நாங்கள் தங்களை தேர்ந்தெடுத்துக் கொண்டோம் ; எங்கள் சார்பாக உங்களுக்கு உரிமை உள்ளது; இன்னொரு நபர் தமது நட்புக் கோத்திரமான பனூ கைனுகா உடன் நடந்து கொண்டது போன்று தாங்கள் எங்கள் மீது கருணை காட்டுவீர்கள் என்று நம்புகிறோம். நாங்கள் தங்களுக்கு முன்னுரிமை வழங்குகிறோம். இன்று உங்களுடைய தீர்ப்புக்கு நாங்கள் அதிக தேவை உள்ளவர்களாக இருக்கிறோம் என்று கூறினார்கள்.

நான் முழுமையாக முயற்சி செய்வேன் என்று ஹஸ்ரத் ஸஅது (ரலி) அவர்கள் கூறினார்கள். அதற்கு அந்த மக்கள், முழுமையாக முயற்சி செய்வேன் என்பதற்கு என்ன அர்த்தம் ? என்று கேட்டார்கள். அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கேட்கிறேன்; எனது தீர்ப்பு செயல்படுத்தப்படுமா? என்று ஹஸ்ரத் ஸஅத் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதாவது, உறுதிபடுத்திக் கொள்வதற்காக மறுபடியும் கேட்டார்கள். நிச்சயமாக செயல்படுத்தப்படும் என்று மக்கள் கூறினார்கள். ஹஸ்ரத் ஸஅத் (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) இருந்த திசையின் பக்கம் திரும்பினார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் கம்பீரம் மற்றும் மகத்துவத்தின் காரணமாக அன்னாரை நேரடியாக விளிக்காமல், அங்கு இருக்கின்ற மக்களும் இதற்கு சம்மதிக்கின்றீர்களா? என்று கேட்டார்கள். அதாவது, பெருமானார் (ஸல்) அவர்களை சுட்டிக் காட்டி கேட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்களும் அங்கிருந்த மக்களும் ஏற்றுக் கொள்கிறோம் என்று கூறினார்கள். அப்போது, இந்த விஷயத்தில் எனது தீர்ப்பு என்னவென்றால், பனூ குறைழா உடைய பருவ வயதை அடைந்த ஆண்கள் கொல்லப்பட வேண்டும் ; அவர்களின் பெண்களும், குழந்தைகளும் கைது செய்யப்பட வேண்டும் ;அவர்களின் செல்வம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் ; அவர்களின் வீடுகள் முஹாஜிர்களுக்கு கொடுக்கப்பட வேண்டும். அன்ஸாருக்கு கொடுக்கப்படக் கூடாது என்று ஹஸ்ரத் ஸஅத் (ரலி) அவர்கள் கூறினார்கள். அதற்கு, நாங்கள் அவர்களின் சகோதரர்கள் ஆவோம் ; அவர்களுடன்தான் இருக்கிறோம் என்று அன்ஸார் தோழர்கள் கூறினர். அதற்கு, ஹஸ்ரத் ஸஅத் (ரலி) அவர்கள், முஹாஜிர்களுக்கு உங்களை விட்டு தன்னிறைவு கிடைத்து விட வேண்டும் என்று நான் விரும்புகிறேன் என்று கூறினார்கள். அதாவது, முஹாஜிர்கள் சுதந்திரமாக தம் வேலைகளை செய்து கொள்ளட்டும்! என்று கூறினார்கள். இதைக் கேட்ட பெருமானார் (ஸல்) அவர்கள், ஸஅதே! உங்களுடைய தீர்ப்பு ஏழு வானங்களுக்கு மேலிருக்கும் அல்லாஹ் வழங்கிய தீர்ப்பை போன்று இருக்கின்றது என்று கூறினார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகிறது: ஹஸ்ரத் ஸஅத் (ரலி) அவர்களின் தீர்ப்பைக் குறித்து பெருமானார் (ஸல்) அவர்கள் கூறும் போது, இந்த தீர்ப்பை குறித்து வானவர்கள் எனக்கு ஸஹ்ரீ நேரத்தில் கூறியிருந்தார்கள் என்றார்கள்.

இதைப் பற்றிய விபரத்தை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள்: ஏறக்குறைய 20 நாட்கள் முற்றுகைக்குப் பிறகு இறுதியில் இந்த நற்பேறு இழந்த யூதர்கள் எப்படிப்பட்ட ஒருவரை தம் நடுவராக ஏற்றுக் கொண்டு தம் கோட்டைகளை விட்டு வெளியே வருவதற்கு ஒப்புக் கொண்டார்கள் என்றால் அந்த நபர் அவர்களுடைய நட்புக் கோத்திரத்தை சார்ந்தவராக இருந்தபோதிலும், அம்மக்களின் நடவடிக்கைகளின் காரணமாக அவர்களுக்காக தம் உள்ளத்தில் எவ்வித கருணையும் கொண்டிருக்கவில்லை. அவர் நீதி மற்றும் நேர்மையின் உருவமாக திகழ்ந்த போதிலும், அவருடைய உள்ளத்தில் رَحْمَةٌ لِّلْعَالَمِين (முழு உலகங்களுக்கும் கருணையாளராக திகழ்ந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)) அவர்களைப் போன்று கருணையும் பரிவும் இருக்கவில்லை. இதன் விளக்கம் என்னவென்றால், அவ்ஸ் கோத்திரம் பனூ குறைழாவின் பழைய நட்புக் கோத்திரமாக இருந்தது. அப்போது அந்தக் கோத்திரத்தின் தலைவராக ஹஸ்ரத் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்கள் இருந்தார்கள். அவர்கள் அகழ்ப் போரின் போது காயமடைந்து பள்ளிவாசலின் வளாகத்தில் சிகிச்சைப் பெற்றுக் கொண்டிருந்தார்கள். ஸஅது (ரலி) அவர்கள் பயணித்து அங்கு வந்தார்கள். வழியில் அவ்ஸ் கோத்திரத்தைச் சேர்ந்த சிலர் அன்னாரிடம் வந்து,பனூ குறைழா நம்முடைய நட்புக் கோத்திரம் ஆகும்; கஸ்ரஜ் கோத்திரம் தமது நட்புக் கோத்திரமான பனூ கைனுகாவுடன் மென்மையுடன் நடந்து கொண்டது போன்று தாங்களும் பனூ குறைழா உடன் பாரபட்சமாக நடந்து கொள்ள வேண்டும்; அவர்களுக்கு கடுமையாக தண்டனை வழங்கி விடக் கூடாது என்று மீண்டும் மீண்டும்

A. SAMSUL ALAM
A. ABDUL RAHIM

Dealers of Natural Precious & Semi-Precious Gemstones
TOONICE
DEALERS OF PRECIOUS & SEMI-PRECIOUS GEMSTONES
No. 100/59-A, 1st Floor, South Thaikkat Street Melapalayam, Tirunelveli-627005 Tamil Nadu, India
+91 9659389953 toonicegems@gmail.com
Al-Nida GEMS
No. 1/B3, 1st Floor Village Road Balaji Nagar Extension Puzhuthivakkam, Chennai-600091 Tamil Nadu, India
+91 9042150339 alnidagems@gmail.com
HG GEMS
HANIYAHANA GEMS CO., LTD.
No. 191/16, Soi Puttha Osot Siphraya, Bangrak Bangkok - 10500 Thailand
+66 638751327 gemscertify22@gmail.com

வலியுறுத்திக் கூறினார்கள். ஆரம்பத்தில் ஹஸ்ரத் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்கள் அமைதியாக அவர்களின் பேச்சை கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால், அந்த மக்களின் சார்பாக அதிகமாக வலியுறுத்தப்பட்ட போது, உண்மை மற்றும் நீதி விஷயத்தில் எவருடைய பழிப்பையும் நான் பொருட்படுத்த மாட்டேன் என்று கூறினார்கள். இந்த பதிலை கேட்டபோது மக்கள் அமைதியாகி விட்டார்கள்.

ஹஸ்ரத் ஸஅது (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அருகில் சென்றதும் பெருமானார் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளை பார்த்து قُوْمُوْا إِلَى سَيِّدِكُمْ என்று கூறினார்கள். அதாவது உங்களுடைய தலைவருக்காக எழுந்து நில்லுங்கள் ; சவாரியில் இருந்து இறங்குவதற்கு அவருக்கு உதவி செய்யுங்கள் என்றார்கள். ஸஅது (ரலி) அவர்கள் சவாரியில் இருந்து இறங்கி அன்னாரை நோக்கி சென்றபோது பெருமானார் (ஸல்) அவர்கள் ஸஅது (ரலி) அவர்களைப் பார்த்து, ஸஅதே! பனூ குறைழா உங்களை நடுவராக ஒப்புக் கொண்டுள்ளார்கள். அவர்கள் விஷயத்தில் நீங்கள் என்ன தீர்ப்பு கொடுத்தாலும் அதை அவர்கள் ஒப்புக் கொள்வார்கள் என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் ஸஅத் (ரலி) அவர்கள் தம் கோத்திரமான அவ்ஸ் கோத்திரத்து மக்களைப் பார்த்து,

حَكَمَ عَلَيْكُمْ بِذَٰلِكَ عَهْدُ اللهِ وَمِيْثَاقُهُ

اِنَّ الْحُكْمَ فِيْهِمْ بِمَا حَكَمْتُ

என்று கேட்டார்கள்.

பொருள்: பனூ குறைழா விஷயத்தில் நான் என்ன தீர்ப்பு கொடுக்கின்றேனோ அதை செயல்படுவதற்கு நீங்கள் கட்டுப்பட்டவர்களாக இருப்பீர்கள் என்று இறைவன் மீது ஆணையிட்டு உறுதி கொடுக்கிறீர்களா?

அதற்கு, அந்த மக்கள், நாங்கள் வாக்குறுதி அளிக்கிறோம் என்று கூறினார்கள். பிறகு ஸஅது (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் அமர்ந்திருந்த திசையைப் பார்த்து, وَعَلَى مَنْ هٰهُنَا

என்று கேட்டார்கள்.

பொருள்: அங்கு அமர்ந்திருக்கின்ற நபரும் நான் வழங்குகின்ற தீர்ப்பை செயல்படுத்துவதற்கு கட்டுப்பட்டவராக இருப்பார் என்று வாக்குறுதி அளிக்கிறாரா?

அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், நான் வாக்குறுதி அளிக்கிறேன் என்று கூறினார்கள்.

இவ்வாறு வாக்குறுதி மற்றும் உறுதிமொழி வாங்கப்பட்ட பிறகு ஸஅது (ரலி) அவர்கள் தம் தீர்ப்பை கூறினார்கள்:

பனூ குறைழாவின் கொலையாளிகள் அதாவது, போர் செய்தவர்கள் கொல்லப்பட வேண்டும் என்றும், அவர்களின் பெண்களும், பிள்ளைகளும் கைது செய்யப்பட வேண்டும் என்றும் அவர்களின் செல்வங்கள் முஸ்லிம்களிடத்தில் விநியோகம் செய்யப்பட வேண்டும் என்றும் கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த தீர்ப்பை கேட்ட போது,

لَقَدْ حَكَمْتَ بِحُكْمِ اللهِ

என்று கூறினார்கள். பொருள்: உங்களுடைய இந்த தீர்ப்பு இறை நியதி ஆகும். அது ஒருபோதும் விலகாது.

பெருமானார் (ஸல்) அவர்கள் கூற வந்த கருத்து என்னவென்றால், பனூ குறைழாவை குறித்து இந்த தீர்ப்பு எப்படிப்பட்ட சூழ்நிலையில் கூறப்பட்டுள்ளது என்றால், இதில் இறை ஆதிக்கம் இருந்தது தெளிவாக தென்பட்டது. ஆகவே அன்னாரிடத்தில் இருந்த கருணை உணர்வால் இதை தடுக்க இயலாது என்பதாகும்.

இந்த விஷயம் முற்றிலும் சரியானதே! ஏனெனில் பனூ குறைழாவை சார்ந்தவர்களுக்கு அபூ லுபாபஃ (ரலி) அவர்களின் நாவிலிருந்து முற்றிலும் அடிப்படையற்ற விஷயம் வெளிப்படுவது, பனூ குறைழா மக்கள் பெருமானார் (ஸல்) அவர்களை நடுவராக ஏற்றுக் கொள்ள மறுப்பது, அவ்ஸ் கோத்திரம் தம் நட்புக் கோத்திரமாகும்; அவர்கள் தம்மோடு சாதகமாக நடந்து கொள்வார்கள் என்று கருதிக் கொண்டு அவ்ஸ் கோத்திரத்தின் தலைவரான ஸஅது பின் முஆஸ் (ரலி) அவர்களை தம் நடுவராக நியமிப்பது, ஸஅது (ரலி) அவர்களின் உள்ளத்தில் இருந்து குல நேசம் மற்றும் சமுதாய தொடர்புகள் ஆகியவை முற்றிலும் விலகி உண்மை மற்றும் நீதியின் வழியில் அவர்கள் உறுதியோடு நிற்பது, ஸஅது (ரலி) அவர்கள் தம் தீர்ப்பை அறிவிப்பதற்கு முன் தாம் கூற இருக்கும் தீர்ப்பு எவ்வகையிலும் செயல்படுத்தப்பட வேண்டும் என்று பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் உறுதியான உடன்படிக்கை வாங்கிக் கொள்வது ஆகியவை அனைத்தும் தற்செயலாக நிகழ்ந்தது கிடையாது. நிச்சயமாக இதற்குப் பின்னால் இறைநியதி தம் வேலையை செய்து கொண்டிருந்தது. இந்தத் தீர்ப்பு இறைவனுடைய தீர்ப்பாக இருந்ததேயன்றி ஸஅது (ரலி) அவர்களின் தீர்ப்பாக இருக்கவில்லை.

ஹஸ்ரத் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களின் தீர்ப்பு செயல்படுத்தப்பட்டது தொடர்பாக மேற்கொண்டு இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

ஹஸ்ரத் ஸஅது (ரலி) அவர்கள் தீர்ப்பு கூறிய பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் துல்ஹஜ் 9-ம் நாள் வியாழக்கிழமை அன்று மதீனாவுக்கு திரும்பி வந்தார்கள். ஓர் அறிவிப்பில் துல்ஹஜ் 5-ம் நாள் திரும்பி வந்தார்கள் என்று கூறப்பட்டுள்ளது. பெருமானார் (ஸல்) அவர்கள் துல்ஹஜ் 7-ம் நாள் மதீனாவுக்கு திரும்பி வந்தார்கள். அது வியாழக்கிழமையாக இருந்தது என்று இப்னு ஸஅது (ரலி) அவர்கள் எழுதி இருக்கிறார்கள். அந்த கைதிகளை மதீனாவுக்கு கொண்டு வருமாறு கட்டளையிட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் கட்டளைக்கு ஏற்ப ஹஸ்ரத் உஸாமா பின் ஸைது (ரலி) அவர்களின் வீட்டுக்கு அந்த கைதிகள் கொண்டு வரப்பட்டார்கள். பெண்களும், பிள்ளைகளும் ஹஸ்ரத் ரம்லா பின்த் ஹாரிஸ் (ரலி) அவர்களின் வீட்டுக்கு கொண்டு செல்லப்பட்டார்கள். அவர்கள் அனைவரும் ஹஸ்ரத் ரம்லா பின்த் ஹாரிஸ் (ரலி) அவர்களின் வீட்டில் சிறை வைக்கப்பட்டிருந்தார்கள் என்றும் கூறப்படுகின்றது. பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த கைதிகளுக்காக பேரீத்தம் பழங்களை கொண்டு வருமாறு கட்டளையிட்டார்கள். கொண்டு வரப்பட்ட பழங்கள் தரை முழுவதும் வைக்கப்பட்டிருந்தன. மக்கள் எண்ணிக்கையற்ற முறையில் பேரீத்தம் பழங்களை கொண்டு வந்தார்கள். இரவு முழுவதும் அந்த யூதர்கள் அவற்றை திருப்தியாக உண்டு கொண்டிருந்தார்கள். ஆயுதங்கள், பொருட்கள் மற்றும் உடைகள் போன்றவற்றையும் ஹஸ்ரத் ரம்ஸா (ரலி) அவர்களின் வீட்டுக்குக் கொண்டு வருமாறு கட்டளையிட்டார்கள். ஒட்டகங்களும், ஆடுகளும் அங்கேயே மரங்களின் கீழே மேய்வதற்காக விடப்பட்டன.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

பனூ குறைழாவின் ஒப்பந்தம் மீறுதல், துரோகம், கிளர்ச்சி, குழப்பம் மற்றும் கலகம் விளைவித்தல், கொலை செய்தல், ரத்தம் சிந்த வைத்தல் ஆகியவற்றின் காரணமாக அவர்களின் போர் வீரர்கள் உலகில் இருந்து அழிக்கப்பட வேண்டும் என்று இறைவனின் நீதிமன்றத்தில் இருந்து இந்த தீர்ப்பு வெளிப்பட்டது போன்று தெரிய வருகின்றது. ஏனெனில், ஆரம்பத்திலேயே பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இந்தப் போரைக் குறித்து மறைமுகமான முறையில் வலியுறுத்தப்பட்டதும் கூட இது இறை நியதியாக இருந்தது என்பதை வெளிப்படுத்துகின்றது. தம் தூதரின் மூலமாக இந்த தீர்ப்பு வெளிப்படுத்துவதில் இறைவனுக்கு சம்மதம் இருக்கவில்லை. ஆகவே அவன் மிகவும் நுட்பத்திலும் நுட்பமான முறையிலும் மறைவான வகையிலும் பெருமானார் (ஸல்) அவர்களை இதிலிருந்து முற்றிலும் விலக்கி வைத்து விட்டான். மேலும் ஸஅது பின் முஆஸ் (ரலி) அவர்கள் மூலமாக இந்த தீர்ப்புக்கான அறிவிப்பை செய்ய வைத்தான். அந்தத் தீர்ப்புக்கான அறிவிப்பையும் எவ்வாறு செய்ய வைத்தான்? என்றால் அப்பொழுது பெருமானார் (ஸல்) அவர்களும் கூட முற்றிலும் தலையிட முடியாமல் இருந்தது. ஏனெனில், ஸஅது பின் முஆஸ் (ரலி) அவர்கள் கூறும் தீர்ப்புக்கு தாம் எல்லா வகையிலும் கட்டுப்பட்டிருப்பதாக அன்னார் (ஸல்) வாக்குறுதி கொடுத்திருந்தார்கள். பனூ குறைழா மீது பெருமானார் (ஸல்) அவர்கள் அநீதி இழைத்தார்கள் என்று கூறி அந்நியர்களும், ஆட்சேபனை செய்யக் கூடியவர்களும் சில சமயத்தில் நம்முடைய

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com



Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 9 THU 21 -28 NOVEMBER 2024 Issue No.47 & 48

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

இளைஞர்களிடத்திலும் விஷ சிந்தனையை தோன்றச் செய்தார்கள். அதற்கு இது மிகவும் தெளிவான பதிலாகும். பெருமானார் (ஸல்) அவர்களோ, எந்த தீர்ப்பும் கொடுக்கவில்லை. பனூ குறைழா உடைய நட்புக் கோத்திரத்தின் மூலமாகத்தான் அல்லாஹ் தீர்ப்பு கொடுக்க வைத்தான். தீர்ப்பு கொடுத்தவரும் பெருமானார் (ஸல்) அவர்களிடமிருந்து உறுதியான வாக்குறுதியை வாங்கிக் கொண்டார்.

எவ்வாறு இருப்பினும், பிறகு இந்தத் தீர்ப்புடைய தாக்கமும் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது மட்டும் ஏற்படப் போவதில்லை. மாறாக, அனைத்து முஸ்லிம்களின் மீதும் ஏற்பட இருந்தது. ஆகவே பெருமானார் (ஸல்) அவர்கள் தம்முடைய மன்னிக்கும் பண்பு மற்றும் கருணையை அடிப்படையாகக் கொண்ட தம் ஆலோசனை மூலமாக அந்தத் தீர்ப்பை மாற்றுவதற்கு தமக்கு உரிமை இல்லை என்று புரிந்து கொண்டார்கள். இது இறை செயலாக இருந்தது. அந்த ஆற்றலின் தாக்கத்திற்குள்ளாகி பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸஅத் (ரலி) அவர்களைப் பார்த்து,

قَدْ حَكَمْتَ بِحُكْمِ اللهِ

என்று கூறினார்கள்.

பொருள்: ஸஅதே! உங்களுடைய இந்த தீர்ப்பு இறை நியதியாக தெரிகின்றது ; அதை மாற்றுவதற்கு எவருக்கும் ஆற்றல் இல்லை.

இதை கூறிய பிறகு அன்னார் மௌனமாக அங்கிருந்து எழுந்து நகரை நோக்கி புறப்பட்டார்கள். எந்த சமுதாயம் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்று அன்னாருடைய உள்ளத்தில் பெரும் விருப்பம் இருந்ததோ அந்த சமுதாயம் தம் தீய நடவடிக்கைகளின் காரணமாக நம்பிக்கை கொள்ள இயலாமல் போய் இறை கோபத்திற்கும் தண்டனைக்கும் இலக்கானதை நினைத்து, அப்போது அன்னாருடைய உள்ளத்தில் வேதனை ஏற்பட்டிருந்தது. அநேகமாக அந்த சந்தர்ப்பத்தில்தான் பெருமானார் (ஸல்) அவர்கள் பெரும் வருத்தத்துடன்,

لَوْ اٰمَنَ بِیْ عَشَرَۃٌ مِنَ الْیَہُوْدِ
وَلَاٰمَنَتْ بِیَ الْیَہُوْدُ

என்று கூறினார்கள்.

பொருள்: யூதர்களில் பத்து (செல்வாக்கான) நபர்கள் என் மீது ஈமான் கொண்டிருந்தாலும் கூட இந்த முழு சமுதாயமும் என்னை ஒப்புக் கொண்டு இறை தண்டனையிலிருந்து தப்பித்திருக்கும் என்று நான் இறைவனிடம் எதிர்பார்ப்பு வைத்திருப்பேன் .

அங்கிருந்து எழும்போது பனூ குறைழா உடைய ஆண்களையும், பெண்கள் மற்றும் பிள்ளைகளையும் தனித்தனியாக பிரிக்குமாறு கட்டளையிட்டார்கள். ஆகவே இரு குழுக்களாக தனித்தனியாக அவர்கள் பிரிக்கப்பட்டு மதீனாவுக்குக் கொண்டு வரப்பட்டார்கள். நகருக்குள் இரு வெவ்வேறு கட்டடத்தில் அவர்கள் தங்க வைக்கப்பட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் கட்டளையின் காரணமாக ஸஹாபிகளில் பல பேர் தாம் பசியோடு இருந்து கொண்டு பனூ குறைழாவுக்காக குவியல் குவியலாக பழங்களைக் கொண்டு வந்து கொடுத்தார்கள். அந்த யூதர்கள் இரவு முழுவதும் பழங்களை உண்பதில் மூழ்கி இருந்தார்கள் என்றும் எழுதப்பட்டுள்ளது.

காலை விடிந்த போது மதீனாவின் ஒரு கடைவீதியில் குழி தோண்டுமாறு கட்டளை இடப்பட்டது. அபூ ஜஹ்ம் அத்வீ அவர்களின் வீட்டிலிருந்து அஹ்ஜாருஸ் ஸைது வரை குழி தோண்டப்பட்டது. பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் வருகை தந்தார்கள். அன்னாருடன் சில ஸஹாபிகளும் வந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் பனூ குறைழா உடைய ஆண்களை அழைத்தார்கள். அவர்கள் குழுக்களாக பிரிக்கப்பட்டு அந்த அகழில் அவர்கள் கொல்லப்பட்டார்கள். அவர்கள் கொண்டு செல்லப்படும் போது அவர்கள் கஅப் பின் அஸதிடம், முஹம்மது ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? என்பது பற்றி உங்களது கருத்து என்ன? என்று கேட்டார்கள். அதாவது ஒருவர் அவரிடம் இதைக் கேட்டார். அதற்கு, உங்களுக்கு எது தீங்கோ அதை அவர் செய்யப் போகிறார் ; அது உங்களுக்கு நல்லதாக இருக்காது. உங்கள் மீது அழிவுதான். உங்களுக்கு எந்நிலையிலும் புரிவதில்லை. அழைக்கக்கக் கூடியவன் விடுவதில்லை ; செல்லக் கூடியவர் திரும்ப வருவதில்லை. அல்லாஹ்வின் மீது ஆணையாக! செல்லக் கூடியவருக்காக வாள் காத்திருக்கின்றது என்று அவர் கூறினார்.

இப்பொழுது கோபப்படக் கூடிய நேரம் கிடையாது. நாங்கள் உங்களுடைய ஆலோசனையை ஒப்புக் கொண்டிருந்தால், நமக்கும் முஹம்மது ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த அந்த உடன்படிக்கையை நாங்கள் முறித்திருக்க மாட்டோம் என்று யூதர்கள் கூறினார்கள். இப்போது இந்த பழிச் சொற்களை விட்டு விடுங்கள். இப்போது உங்களை விட்டு எதுவும் விலக்கப்படாது. இப்போது வாளை சகித்துக் கொள்ளுங்கள் என்று ஹுயய் பின் அக்தப் கூறினான்.ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களும் ஹஸ்ரத் ஸுபைர் பின் அவ்வாம் (ரலி) அவர்களும் யூதர்களை கொலை செய்வதற்காக நியமிக்கப்பட்டிருந்தார்கள். கொல்லப்படுவதற்காக கைதிகள் ஸஹாபிகளுக்கு மத்தியில் பங்கிட்டு கொடுக்கப்பட்டிருந்தார்கள் என்றும் சில அறிவிப்புகளில் உள்ளது.

இதற்கான விபரத்தை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதி இருக்கின்றார்கள்:

அடுத்த நாள் காலையில் ஹஸ்ரத் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களின் தீர்ப்பு அமல்படுத்தப்பட இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் தகுதியான சில நபர்களை அந்த வேலைக்காக நியமித்து இருந்தார்கள். மேலும் அன்னாரும் அருகிலேயே ஓரிடத்தில் அமர்ந்திருந்தார்கள். ஏனெனில், தீர்ப்பை செயல்படுத்தும்போது அன்னாருடைய வழிகாட்டலுடைய அவசியம் ஏற்பட்டால் தாமதிக்காமல் வழிகாட்டல் கொடுப்பதற்காக அன்னார் (ஸல்) அங்கேயே இருந்தார்கள். அத்துடன் ஏதேனும் ஒரு குற்றவாளி தொடர்பாக எவராவது ஒருவர் கருணைக்காக மேல் முறையீடு செய்தால் உடனடியாக தீர்ப்பு கொடுப்பதற்காகவும் அன்னார் (ஸல்) அங்கே இருந்தார்கள். ஹஸ்ரத் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களுடைய தீர்ப்பின் மேல்முறையீடு நீதிமன்ற வழிமுறைப்படி அன்னாருக்கு முன்னால் எடுத்து வைக்கப்பட முடியாததுதான். ஆனால் ஓர் அரசர் அல்லது ஓர் அதிபர் என்ற முறையில் ஒரு நபரைக் குறித்து குறிப்பிட்ட காரணத்தை அடிப்படையாக வைத்து கருணைக்கான மேல்முறையீடு வரும்போது, அதை அன்னாரால் பரிசீலிக்க முடியும். அன்னாரிடம் காணப்பட்ட கருணை எப்படிப்பட்டதாக இருந்தது என்றால், குற்றவாளிகள் தனித்தனியாக கொண்டு செல்லப்பட வேண்டும் என்றும் கட்டளையிட்டிருந்தார்கள். அதாவது ஒருவர் கொல்லப்படும்போது, இன்னொரு குற்றவாளி அருகில் இருக்கக் கூடாது என்று கூறியிருந்தார்கள். ஆகவே ஒவ்வொரு குற்றவாளியும் தனித்தனியாக கொண்டு செல்லப்பட்டு ஹஸ்ரத் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களுடைய தீர்ப்புக்கு இணங்க அவர் கொல்லப்பட்டார்.

இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம்..........

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad